CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1952
MADRAS

கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி

மாதப் பத்திரிகை — விலை 4 அணா

சந்தா விகிதம்:

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணா நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு முன் பணம் கட்டும் ஏஜண்டுகளே தேவை.

“கைத்தறி” காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

தறி 3	கோவை, 15—7—1952.	பாவு 9

பரிசீலனைக்கு

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் மதுரைப் பேச்சு!

அருப்புக்கோட்டையில்சென்றமாதம் நடைபெற்ற பாராளுமன்றஉபதேர்தலையொட்டி காங்கிரஸ் கட்சிக்காதரவு தேட மத்தியசர்க்காரின் தொழில் வர்த்தக இலாக்கா அமைச்சர் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வந்திருந்தார். அதுபோது மதுரை—ராமநாதபுரம் வர்த்தக சங்கம் அவரை அழைத்து கவுரவித்தது மதுரையில்.

வர்த்தக சங்கத்தின் வரவேற்புக்கு பதில் கூறும்போது பல உண்மைகளை ஸ்ரீ டி. டி. கே அவர்கள் வெளியிட்டிருக்கிறார். வர்த்தகர்கள் கோரியது; ஜவுளி, நூல் ஆகியவைகளுக்குள்ள கட்டுப்பாடுகளைப் பூரணமாக நீக்கிவிட வேண்டுமென்றதாகும். அதற்கு ஸ்ரீ டி. டி. கே. “பருத்தி நூல் கட்டுப்பாட்டை முற்றிலும் நீக்க இயலாது” எனப் பதில் கூறியிருக்கிறார். இன்று யதார்த்தத்தில் டெக்ஸ்டைல் கண்ட்ரோல் என்பது எப்படியிருக்கிறதென்பதும், அது நீடிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதும் தர்க்கத்திற்குரியதேயென்றாலும், அவர் கைத்தறி ஜவுளித் தேக்கத்தைப்பற்றியும், நூல் ஏற்றுமதி பற்றியும் கூறியுள்ள பகுதிகளை எடுத்துக்கொண்டு மட்டும் நாம் பார்க்கும்போது அவை எந்த அளவிற்கு ஏற்கனவே நம் ராஜ்ய அமைச்சர்கள் கூறிய வாக்குறுதிகளுக்கு முரணாக இருக்கிறது என்பது புலனாகும்.

சென்னை ராஜ்ய நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் கூறியுள்ளதற்கும், ஸ்ரீ டி. டி. கே யின் பேச்சுக்கும் ஏகப்பட்ட முரண்பாடுகள் தென்படுகின்றன. அவைகளில் எது உண்மை, உண்மையல்லவென்பதைப் புரிந்துகொள்வதே மிகப் பெரிய சிரமமாக இருக்கிறது.

“தேங்கியிருக்கும் கைத்தறித் துணியை வெளிநாடுகளில் விற்பனை செய்ய—வெளிநாடுகளில் இருக்கும் இந்திய ஸ்தானிகராலயங்களில் உள்ள வர்த்தக ஆலோசனையாளர்களுக்கு இந்திய சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர்.......கைத்தறி ஜவுளித் தேக்கம் சம்பந்தமாக சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரின் உதவியை நாடியது. இதன்பேரில் மத்திய சர்க்கார் இலாக்காக்கள் யாவும் சாத்தியமானவரை சென்னை ராஜ்ய கைத்தறித் துணிகளையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென உத்திரவிட்டுள்ளனர்........ தனிப்பட்ட வியாபாரிகளிடமுள்ள கைத்தறி ஜவுளியையும் சர்க்கார் குறைந்த விலையில் கொள்முதல்செய்து அவைகளை விற்கும்” என ராஜ்ய நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் கூறியிருக்கிறார்.

இதைப் படிக்கும் எவருக்குமே சர்க்காரின் நடவடிக்கைகளில் நம்பிக்கை பிறக்கத்தான் செய்யும். இந்த அளவிற்கு மத்திய சர்க்கார் கைத்தறி ஜவுளித் தேக்கத்தைத் துடைக்க கவனமெடுத்துக் கொண்டிருக்கிறதேயெனப் பலரும் பாராட்டத்தான் செய்திருப்பர்

அத்துடன், ராஜ்ய சர்க்கார் வேறு, வெளி நாடுகளில் கைத்தறி ஜவுளிக்கு மார்க்கெட் தேட ஒரு தூது கோஷ்டியை அனுப்ப போகிறார்கள் என்ற அறிவிப்பும் சேர்ந்து, ராஜ்ய கைத்தறியாளர்களுக்கு ஏதோ நல்லதொரு விடிவுகாலம் பிறக்கப் போகிறது, என்ற சந்தோஷத்தையே உண்டாக்கியிருக்கும். அப்படித்தான் எல்லோரும் எண்ணினர்; பாராட்டினர்.

ஆனால், இந்த நல்லெண்ணங்களெல்லாம் உடைந்து போகும்படி—கனவாகும்படி செய்திருக்கிறது ஸ்ரீ டி. டி. கே யின் மதுரைப் பேச்சு! அவரது பேச்சை அப்படியே நாம் வாசகர்கள் முன் எடுத்து வைக்கிறோம்; சிந்தித்துப்பார்ப்பதற்காக.

"கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உடனடியாக உதவி யளிப்பது பற்றி இந்திய சர்க்கார் பரிசீலனை செய்தது. இத்துறையில் சர்க்கார் அதிகம் உதவி செய்ய இயலாது ... ஏராளமாகத் தேங்கியுள்ள கைத்தறி ஜவுளியிருப்பை வாங்குவதற்கு நிதி உதவியளிக்க வேண்டுமென்று கோருவது, சர்க்கார் வியாபாரத்தில் இறங்கி விலைகள் குறைந்து கொண்டிருக்கும் சமயத்தில் அதனால் ஏற்படும் ஆபத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புவதாகும். இதனால் சர்க்காருக்கு பெரும் நஷ்டமேற்படும்' என்று ஸ்ரீ டி. டி. கே கூறியிருக்கிறார்.

இந்தப்பேச்சின் நேரடியான அர்த்தமென்ன? மத்திய சர்க்கார், நம் ராஜ்ய சர்க்காரின் நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியம் கூறுவதைப் போன்று ஒன்றும் செய்யாது என்பது தானே? வேறு என்ன அர்த்தம் கொள்ள முடியும்? அதிகம் உதவி செய்ய இயலாது என்றால் ஏதோ கண்துடைப்புக்காகக் கொஞ்சம் நிதி உதவியோ, அன்றி சிறிது துணி வாங்கியோ இதைத்தான் எங்களால் செய்ய முடிந்ததென்று மத்திய சர்க்கார் கூறி பொறுப்பிலிருந்து விலகி ஓடி விடமுடிவு செய்திருப்பதாகத்தானே அவரது பேச்சு பொருள்படுகிறது?

உண்மையிலேயே இந்த ராஜ்ய கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நன்மை செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு மத்திய சர்க்கார் வந்திருக்குமானால் ஸ்ரீ டி. டி. கே. அவர்கள், சென்னைராஜ்ய நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்ரமணியத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து ஆமோதித்தல்லவா பேசியிருக்கவேண்டும்? அப்படி அவர் பேச வில்லை—இருவரின் பேச்சுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாசம்—முரண்பாடு அல்லவா பிரதயட்சமாக காணக்கிடக்கிறது.

அதுமட்டுமல்ல; கைத்தறி ஜவுளித் தேக்கம் தீர அடுத்து வரும் தீபாவளிப் பண்டிகையை ஸ்ரீ டி. டி. கே. சுட்டிக் காட்டுகிறார்; கையிருப்பில் உள்ள தேக்கம் முழுவதும் தீர்ந்து விடுமென்று.

தீபாவளியும், பொங்கலும் ஆண்டுதோறும் வந்துகொண்டுதானிருக்கின்றன. அதை ஒரு மத்திய சர்க்காரின் அமைச்சர் சுட்டிக்காட்டித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இங்கு யாருமில்லை. இப்பண்டிகைகள் மூலமே ராஜ்ய கைத்தறி ஜவுளி உற்பத்தி பூராவும் தீர்ந்துவிடுமென்றால் பிரச்னையே யில்லை. அப்படித் தீருவதாக இல்லாத நிலையிலிருப்பதால்தானே நெருக்கடி ஆண்டுக்காண்டு நீண்டு கொண்டேபோகிறது?

'ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கைத்தறிநெசவாளர்களுக்கு நிவாரணமளிக்க இயலுமென நம்புகிறேன் ஆனால் தற்போது உறுதியாக எதுவும் கூற இயலாது" என்று தொடர்ந்து பேசுகையில் அதே வரவேற்புக்கூட்டத்தில் கூறியுள்ளார்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணமளிப்பதிலோ, அவர்களது தொழில்-வர்த்தகம் ஆகிய வைகளுக்கு பாதுகாப்பு தேடித் தருவதிலோ இன்னும் மத்திய சர்க்கார் ஒரு திட்டமான முடிவுக்கு வரவில்லை யென்று ஸ்ரீ. டி. டி. கே யே அப்பட்டமாக ஒப்புக்கொள்கிறார். அதே காலத்தில் இங்குள்ள நம் அமைச்சர்கள், மத்திய சர்க்கார் சென்னை ராஜ்ய கைத்தறி துணிகளையே தங்களின் இலாக்காத் தேவைகளுக்கு வாங்க வேண்டுமென்றும், வெளி நாட்டு ஸ்தானிகராலயங்களில் உள்ள வர்த்தக ஆலோசனையாளர்களுக்கு கைத்தறித் துணிகளை வெளி நாடுகளில் விற்க முயற்சிக்க வேண்டுமென்றும் உத்திரவிட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இதில் எதை நாம் நம்புவது?

கைத்தறித் துணி ஏற்றுமதி வர்த்தகத்தை விருத்தி செய்வதற்காக ராஜ்ய சர்க்கார், வெளி நாடுகளுக்கு ஒரு தூது அனுப்பப் போவதாக சமீபத்தில் அறிவித்தனர். கடந்த பல ஆண்டுகளாக நம் ராஜ்ய கைத்தறியாளர்களின் பல்வேறு ஸ்தாபனங்களும் விடாப்பிடியாக வற்புறுத்தி வந்த கோரிக்கை நிறைவேற்றப்படப் போவதைக் கேட்டு சம்பந்தப்பட்ட அனைவருமே சந்தோஷித்தனர்; காலந்தாழ்ந்தாவது தங்கள் கோரிக்கை ஏற்கப்பட்டதே யென எண்ணிப்பலர் வரவேற்றனர். "கைத்தறி" யும் வரவேற்று, நடைமுறையில் தூது வெற்றியடையப் பல ஆலோசனைகளையும் கூறிற்று

ஆனால், அந்த வரவேற்பும், பூரிப்பும அர்த்தமற்றதாக்கி விட்டிருக்கிறார். ஸ்ரீ. டி. டி. கே.

அவர், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு "நிவாரணமளிக்க தற்போது ஒன்றும் உறுதியளிக்க முடியாது" என்று கூறியதோடு, கைத்தறி ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்திற்கு (மத்திய

சர்க்கார்) உலை வைத்திருப்பதையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக கீழ்க்கண்டவாறு அதே கூட்டத்தில் அறிவித்துள்ளார். 'எந்தநாடுகளிலிருந்து கைத்தறி ஜவுளிகள் வாங்கப்படுகிறதோ அந்த நாடுகளுக்கு சர்க்கார் நூல் ஏற்றுமதி செய்ய அனுமதித்துள்ளனர். அதனால் அந்த நாடுகளுக்கென இங்கு உற்பத்தி செய்யப்படும் ரகங்களின் கிராக்கி குறைந்து விடும்' என்று.

இந்த வாக்கியங்கள் எப்படி கைத்தறி ஜவுளி வெளி நாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதிக்கிறது என்பதைப் படம்பிடித்துக்காட்டுகிறது. என்பதைப் பாருங்கள். உண்மையிலேயே ராஜ்ய சர்க்காரின் முயற்சிக்கு மத்திய சர்க்காரின் வர்த்தக இலாகா எவ்வாறு தீங்கிழைக்கிறது என்பதையும் பாருங்கள்.

ஒரு பக்கம் நெசவாளர்களின் நண்பனாகவும், ஆதரவாளனாகவும் பேசுவது; மறுபக்கம் அவனைப் புதைகுழி நோக்கி அழைத்துச்செல்ல நடைமுறையில் திட்டமிடுவது. இதுதான் இன்றைய யதார்த்த சம்பவங்களாக நம் அனைவரின் கண்முன்னும் காட்சியளித்து நிற்பது. மத்திய சர்க்காருடைய போக்கிற்கும், ராஜ்ய சர்க்காரின் முயற்சிகளுக்கும் எப்படிப்பட்ட மலைக்கும் மடுவுக்கு முள்ள முறண்பாடுகள் இருக்கின்றன என்பதற்கு இதுவே தகுந்த உதாரணங்களாகும்.

கைத்தறி ஜவுளி ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டியது போய், மில் துணி, நூல் ஏற்றுமதிக்கு தாராள அனுமதி வழங்கப்படுகிறதெனில் உண்மையிலேயே இது கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உதவுவதாக ஆகுமா என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

கடந்தகால நடைமுறை அனுபவங்களிலிருந்து விளைந்தவைகளை மத்திய சர்க்கார் உணர்ந்து அதற்கேற்ப தங்களுடைய வர்த்தகக் கொள்கையை அகில இந்திய ரீதியில் முறணின்றித் திருத்தி அமைத்துக் கொள்ளவில்லை, அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவுமில்லை யென்றே ஸ்ரீ டி. டி. கேயின் பேச்சு நமக்கெல்லாம் தெளிவுபடுத்துகிறது.

ஆகவே, ஸ்ரீ டி. டி. கேயின் பேச்சு, ராஜ்ய சர்க்காரின் நன் முயற்சிகளுக்கு இடைஞ்சலாக இருப்பதை ராஜ்ய மந்திரி சபையினரின் கவனத்திற்கு நாம் கொண்டுவருவதுடன், நடைமுறையில் விளைகின்ற இதுபோன்ற முறண்பட்ட கொள்கைகளைப் பற்றி மத்திய சர்க்காரும் ராஜ்யசர்க்காரும் கலந்துபேசித் தீர்த்துக்கொண்டு இந்த ராஜ்ய கைத்தறி தொழில், வர்த்தகத் துறைகளுக்கு எவ்வித தீங்கும் நேரா வண்ணம் பார்த்துக் கொள்ளவும் வேண்டும் என்றும்—அவ்வகையில் முயற்சி எடுத்துக் கொள்ள முனைய வேண்டுமென்றும் நாம் கோருகிறோம்.

வெளி நாடுகளுக்கு மில் துணி ஏற்றுமதியை அனுமதிப்பதின் மூலம் உள் நாட்டில் கைத்தறித் துணிக்கு கிராக்கியோ, மார்க்கெட்டோ ஏற்படுமல்லவா எனப்பலர் கேட்கலாம். இக் கேள்வி மேலெழுந்த வாரியாக சரியாக இருக்கலாம். ஆனால், இந்நடைமுறை உள் நாட்டில் கைத்தறித்துணிக்கு நிச்சயம் மார்க்கெட்டாக அமையாது என்பதைகேள்விகேட்கத்துணிபவர்கள் உணர்ந்தாக வேண்டும். ஏனெனில், இங்கு உற்பத்திசெய்யப்படும் கைத்தறி துணி ரகங்களில் 62சதம் வெளி நாட்டு ஏற்றுமதிக்கானவைகளே யென்பதைக் கண்ணுற்றால், மில் துணி ஏற்றுமதி வர்த்தகம் நிச்சயம் வெளி நாட்டு கைத்தறித் துணி ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதிக்கத்தான் செய்யும் என்பதைஉணர்வர். தவிர, ஸ்ரீ டி. டி. கே. அவர்களே ஒப்புக்கொண்டுள்ளபடி நூல் ஏற்றுமதியும் இங்கு வெளி நாட்டு ஏற்றுமதிக்கானகைத்தறி ஜவுளி வர்த்தகத்தையும் பாதிக்கும் என்பதை உணர்ந்தாக வேண்டியிருக்கிறது. எனவே, மில் துணி அல்லது நூல் தாராள ஏற்றுமதிக்கு அனுமதிக்கும் போது ஒன்றுகைத்தறித் துணி ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படியெனில் கைத்தறி துணி மார்கெட்டாகவுள்ள நாடுகளுக்கு அதிகமாக கைத்தறி துணிகளே ஏற்றுமதியாகும் படியான ஏற்பாடுகளே செய்யவேண்டும்.

இரண்டு : தவிர்க்க முடியாது மில் துணி, நூல் ஏற்றுமதி செய்ய நேரிட்டால், "தாராள" ஏற்றுமதிக்குப் பதிலாக 'வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச அளவு"களிலேயே அனுப்பத் திட்டமிடப்பட வேண்டும்.

இம்முறைகளில் பிரச்னைகளைத் தீர்க்காது, முறண்பட்ட பாதைகளில் செல்லும் எம் முயற்சியும் நிச்சயம் நம் ராஜ்ய கைத்தறித் தொழில், வர்த்தகம் ஆகியவைகளைப் பாதிக்கத்தான் செய்யும் என்பதை சர்க்காருக்கு நாம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம். அதற்கு அத்தாட்சியாக ஸ்ரீ டி.டி. கே யின் பேச்சு இருப்பாதை ராஜ்ய சர்க்கார் உணர வேண்டு மென்றும் கோருகிறோம். —மா. கி. சா.

சத்திரப்பட்டி நெசவாளர் கூட்டுறவு சங்கபுதிய நிர்வாகிகள் தேர்தல்.

சத்திரப்பட்டி நெசவாளர்கூட்டுறவுசங்க மகாசபைக் கூட்டம் 29-6-52 தேதியன்று நடைபெற்றபோது கீழ்க்கண்டநிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்; அ. மு. பழனிச்சாமி, உப தலைவர்: கே. ராமகிருஷ்ணன், டைரெக்டர்கள்: ம.க. ஆறுமுகம், சு. வாலகுரு, பு. நா. கந்தசாமி, ச. ராமசாமி, ஞா. மாடசாமி. ★

குடிசைத்தொழில்

2

மா. மாரிமுத்து, B. A., B Com.

"நம்மில் பன்னிரண்டில் ஒருவன் நெசவாளி; மானமுடன் தொழில் செய்து ஜீவிப்பவன் அவன்; அவனுடைய தொழிலை ஆதரிப்பது உங்கள் கடன்," என்ற உள்ளம் உருகும் ராஜாஜியின் வாசகம் நெசவுத்தொழிலையே நம்பிவாழும் குடும்பங்களின் எண்ணிக்கையையும், அவர்களுடைய இன்றைய அவல நிலையையும் காவியச் சித்தரமாக எடுத்துக் காட்டுகிறது. சென்னை ராஜ்ய கைத்தறி கூட்டுறவு சங்கத்தின் 1949-50-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையின்படி; சென்னை ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 927; இந்த சங்கங்களில் சேர்ந்து வேலை செய்யும் தறிகளின் தொகை 1,43,227 ஆகும்.

ஏறக்குறைய ஆயிரம் கூட்டுறவு சங்கங்களின் அரவணைப்பில் கைத்தறித் தொழிலுக்கு ஊட்டமளிக்கப்பட்டு வருகிறது. பருத்தி நெசவுத் தொழில் காப்புவரி போர்டின் 1932-ம் வருஷ அறிக்கையின்படி இந்தியாவில் தறிகளின் எண்ணிக்கை 19,84,950. ஆனால் 1931-ம் வருஷத்தின் ஜனத் தொகைக் கணக்கின் படி கைத்தறியையே தம் ஜீவிதத்திற்கு நம்பி வாழ்ந்து கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 2,5,75,000. ஆகவே இந்திய நாட்டின் மிகப் பெரிய தும் போதிய பாதுகாப்பும் ஆதரவும் அளித்தால் ஸ்திரமான எதிர்காலமுள்ளதுமான குடிசைத்தொழில் கைத்தறியேயென்பது தெளிவாகிறது.

கைத்தறியையே நம்பியிருக்கும் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட நெசவாளிகள்தான் அடிக்கடி வியாபார மந்தத்தில் சிக்கித் தத்தளிக்க வேண்டியிருக்கிறது. ஒரே தொழிலையே நம்பி நெசவாளியின் குடும்பமே உயிர்வாழ்வதால் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், பஞ்சத்தையும் எதிர்த்து நிற்கச் சக்தியற்றவர்களாகவே இருக்கின்றனர். அவர்களுடைய நிலையை இன்னும் மோசமாக்கும் மில்களின் மூர்க்கப்போட்டியை சமாளிக்கவேண்டிய அவசியம் பல சமயங்களில் கைத்தறி நெசவாளிக்கு ஏற்படுகிறது. ஆனால் மோட்டா ரகங்களைத்தயார் செய்வதிலும், அதிமெல்லிய ரகங்களில் சிலவற்றையும், பூவேலையும் ஜரிகை வேலைப்பாடு மிக்க ஜவுளி ரகங்களை உற்பத்தி செய்வதிலும் மில்களினால் போட்டியிட முடியாத விதமாக கைத்தறி தனிக்காட்டு ராஜாவாகத் திகழ்கிறது. கைத்தறித் துணி நீடித்த உழைப்புக்கும் வலிமைக்கும் பேர்போனது என்ற பொது மக்களின் நம்பிக்கை இன்னும் மறைந்துவிடவில்லை. ஆகவே ஜவுளி ரகத்தைப் பொருத்தவரை கைத்தறிக்கு உள் நாட்டிலும் ஒரு தனியிடம் உண்டு என்பது உறுதி!

1905-6ல் இந்திய நாட்டில் மட்டும் செலவான கைத்தறித் துணி 108 கோடி கெஜமாகும்; 1941-42ல் 207 கோடி கெஜம் செலவாகியிருக்கிறது. ஆகவே நம் நாட்டின் மூன்றில் ஒரு பாகத்துத் தேவையை கைத்தறி துணியே பூர்த்தி செய்து வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. கடந்த இரண்டாம் உலக யுத்தத்தின் போது வெளி நாட்டு ஜவுளி இறக்குமதியாகாமல் தடையேற்பட்டதாலும் உள் நாட்டிலுள்ள மில்கள் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய சக்தியற்றதாக இருந்தபோதும், கைத்தறி துணிதான் மக்களுக்கு மானம் காத்திருக்கிறது!

கைத்தறித் துணியின் தனிச்சிறப்பியல்பின் காரணமாக அதன் உற்பத்திச் செலவு மிகக் குறைந்ததாக இருக்கிறது. மில்களைவிட அதிக நேரம் கைத்தறி நெசவாளியால் நெசவு வேலைசெய்ய முடிகிறது. மேலும் வீட்டிலுள்ள பெண்களும் குழந்தைகளும் கூட வீட்டு வேலைகளுக்கிடையில் நெசவுத் தொழில் பங்கு கொள்ள முடிகிறது. நெசவுத் தொழிலாளியின் வாழ்க்கைச் செலவுதரம்' மிகக் குறைவாக இருக்க நேரிட்டிருப்பதால் அவன் தன்னுடைய தொழிலிலிருந்து மிகக்குறைந்த லாபவரமபோடு திருப்தியடைய முடிகிறது. குறைந்த லாபவரம்போடு திருப்தியடையக்கூடிய இந்த நிலைதான் நெசவுத் தொழிலாளியை பெரிய மில்களுடன் போட்டியிடச் சாதகமாக்கினாலும்கூட, இந்த அவலநிலையின் நீடிப்பு பெரிதும் பெருமைப்படத் தக்கதல்ல! தன்னுடைய வரம்புக்குட்பட்ட, மில்கள் போட்டியிடமுடியாத சில ரகத் துணிகளைத் தயாரிப்பதில் மட்டும் கைத்தறி நெசவாளி தன் கவனத்தைச் செலுத்

தியிருந்துங்கூட கைத்தறி நெசவாளி, பஞ்சத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளிக்க முடியாத அவல நிலையிலிருக்கிறான்!

கைத்தறியைக் கை தூக்கி விட்டு மற்ற தொழில்களோடு தலை நிமிர்ந்து என்றும் வளத்தோடு செழித்து வாழுவதற்கென்று பல திட்டங்கள் உருவாகியுள்ளன. கைத்தறிக்கான எந்தத் திட்டமும் கைத்தறி நெசவாளியின் திறமையைப் பெருக்குவதன் மூலம் அவனுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும்!

தற்காலிகத் திட்டமாக ஒரு உதவித் திட்டத்தைத் தயாரித்து கைத்தறிக்கு அபயமளிக்க முன் வந்திருக்கிறது நம் ராஜ்ய அரசாங்கம். அரசாங்கப் பற்றுள்ள ஒருவரையோ அல்லது வியாபாரத்துறையில் அனுபவத் திறனுள்ள தனி நபரையோ வெளி நாடுகளுக்கு அனுப்பி கைத்தறிக்கு மார்கெட் தேட இப்பொழுதாவது அரசாங்கம் முன் வந்திருக்கிறது என்பதை நினைக்கும்போது "கைத்தறி"யின் குரல் வீண் போகவில்லை என்பது புலனாகிறது! முடிச்சு ஒன்றுக்கு 6 அணா கூலி வீதம் கொடுக்க ஏற்பாடு செய்து இப்போதைக்கு நெசவாளிக்கு 'கஞ்சிவார்க்க' அரசாங்கத்தின் திட்டம் இடமளித்திருக்கிறது. கைத்தறிக்கு உதவியளிக்க வேண்டுமென மத்திய அரசாங்கத்திற்கும் நம் ராஜ்ய அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது. அரசாங்கத்தின் உபயோகத்திற்கு கூடுமானவரையில் கைத்தறித் துணியை வாங்கப் போவதாகவும் அரசாங்கத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது. கைத்தறித் துணியை ஆதரிக்குமாறு நெசவாளியின் சார்பாக அரசாங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. கைத்தறித் துணித் தேக்கத்தால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தில் ஒரு பகுதியை தான் மேற்கொள்ள அரசாங்கம் முன் வந்திருப்பது, நெசவாளியின் இந்த நெருக்கடியான கட்டத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆகவே அரசாங்கத்தின் கணிசமான பாதுகாப்புப் பெற்ற தொழில் என்ற முத்திரை கைத்தறிக்கு இப்பொழுதுதான் இவ்வளவு பெரிய நெருக்கடிகளுக்குப் பிறகு கிடைத்திருக்கிறது!

அரசாங்கத்தின் அபயமளிக்கும் இத்திட்டம் நெருக்கடி நிலைமைக்கான தற்காலிக அம்சங்கள் நிறைந்ததாகும். கைத்தறிக்கு பாதுகாப்பளிப்பதற்கான பல திறப்பட்ட அம்சங்கள் நிறைந்த நிரந்தரத் திட்டமொன்றை உருவாக்க அரசாங்கம் முன்வர வேண்டும். அரசாங்கத்தின் அபயமளிக்கும் ஏற்பாட்டினால் இப்போதைக்கு கூட்டுறவு சங்கங்களிடமும், தனி வியாபாரிகளிடமும் தேங்கிக்கிடக்கும் கையிருப்பு கைத்தறி ஜவுளி ஓரளவு குறையலாமேயன்றி நிரந்தரமாக உற்பத்தியாகும் சரக்கிற்கு மார்க்கெட்டை உற்பத்தி செய்ய எந்தவித உருப்படியான நடவடிக்கையும் எடுத்ததாகாது. அரசாங்கம் மேற்கொள்ளும் உதவியெல்லாம் வரி கொடுப்போரிடம் வரி உருவத்தில் மறைமுகமாக திரும்பிவரத்தான் செய்யும்! இது கத்தி போச்சுது வால்வந்தது என்ற கதையாகவே முடியும்! ஆகவே சேலம் கைத்தறி நெசவாளர் மகாநாட்டில் ஸ்ரீ. கோபால்சாமி அவர்கள் சமர்ப்பித்ததுபோல நிரந்தரமாக ஒரு நிதி கார்ப்பரேஷன் தோற்றுவிப்பதன் மூலம் கைத்தறிக்கு வேண்டிய நிதிவசதியையும், அதனால் ஏற்படும் மார்கெட்டு பெறும் வழியையும் நிரந்தரமாக்கலாம்.

நம் ராஜ்ய கூட்டுறவு சங்க ரெஜிஸ்ட்ரார் ஸ்ரீ. ரெயான் அவர்களுடைய திட்டமும் மேலும் பல நெசவாளிகளைக் கூட்டுறவு சங்கத்தின் அணைப்பில் கொண்டு வர முயற்சிக்கிறது. நம் ராஜ்யத்தில் இன்னும் பல கைத்தறி கூட்டுறவு சங்கங்களை உடனடியாகத் தோற்றுவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். கூட்டுறவு சங்கங்களில் புதிதாகச் சேரும் நெசவாளியின் பங்குத் தொகையாக, அங்கத்தினராகச் சேரும் ஒவ்வொரு கைத்தறி நெசவாளிக்கும் ரூ. 25- வீதம் வட்டியின்றி கடனாகக் கொடுத்துதவ அரசாங்கம் முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கது! இந்தக் கூட்டுறவு சங்கங்களில் நெசவாளிகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் நெசவாளிக்கு ஓரளவு நிரந்தர வேலை கொடுப்பதாகிறது என்பதோடு, கூட்டுறவு சங்கங்களின் நற்பலனை இன்னும் பல்லாயிரக்கணக்கான நெசவாளியும் பகிர்ந்து அனுபவிக்க முடிகிறது. ஆனால் கூட்டுறவு சங்கத்தின் சிறப்பை உணர்ந்து; அதன் பலனை அனுபவிக்கிறோம் என்று நன்றி மறவாமல்; கூலி அதிகம் கிடைக்கிறது என்பதற்காக கூலி அதிகம் கிடைக்கிறகாலத்தில் மாஸ்டர் வீவர்களின் கடைவாயிலில் காத்துக்கிடக்காமல் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராயுள்ள ஒவ்வொரு நெசவாளியும் கூட்டுறவை வளர்க்க வேண்டுமென்ற கடமை உணர்ச்சியை பலப்படுத்திவர வேண்டும்.!

உத்திரவாதமான
கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ்
ராஜ்யகைத்தறிநெசவாளர்
கூட்டுறவு சங்கத்திடம்
அங்கீகாரம்பெற்றவர்கள்
ஸ்ரீஜெயலட்சுமி
கலர் ஒர்க்ஸ்
சுப்ரமணியசெட்டிவீதி, திருப்பூர்
D.A.S.S.

நம் ராஜ்ய கூட்டுறவு மத்திய சங்கத்தின் பிரதம நிர்வாகி ஸ்ரீ. ஞான சம்பந்தம் அவர்கள் "கூட்டுறவு என்ற ஆங்கில இதழில் வெளியிட்டுள்ள எதிர்கால திட்டமும் கூர்ந்து கவனிக்கத்தக்க சிறப்பான அம்சங்களை கொண்டதாகும். ஜவுளி உற்பத்தியையும், விற்பனையையும் மத்தியக் கூட்டுறவு சங்கமோ, அல்லது அதனுடைய கிளைஸ்தாபனமோ நேரடியாக மேற்கொள்வதே அத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் பயனாக ஜவுளியின் உற்பத்திக்கேயன்றி அதன் உடனடியான விற்பனைக்கும் மத்திய கூட்டுறவு சங்கம் நேரடியாக வேண்டிய வசதி செய்துதர வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. கூட்டுறவு மத்திய சங்கத்தின் நிர்வாகியின் இந்த எதிர்காலத் திட்டத்தினால் ஆங்காங்குள்ள சங்கங்களுக்குள்ளாகும் போக்குவரத்துக்கான செலவினங்கள் போன்ற சில்லரைச் செலவுகள் சுருங்கிவிடுவதோடு, மொத்த வியாபாரத்தினால் வரும் ஊதியமும் சிதறாமல் கிடைக்க வழியேற்படுகிறது. ஆனால் கூட்டுறவு சங்கத்தின் முதிர்ச்சியான ஒரு கட்டத்தில்தான் இந்தத் திட்டம் சாத்தியமாகக் கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு நெருக்கடியான சமயத்தில் அரசாங்கம் ஒரு தற்காலிக திட்டத்தினால் அபயமளிப்பதைக் காட்டிலும், இனியும் எதிர்காலத்தில் மானமுடன் தொழில் செய்து ஜீவிக்க விரும்பும் கைத்தறி நெசவாளி வியாபார மந்தத்தினால் விளையும் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும், பஞ்சத்தினாலும் அபலையாகி அல்லல்பட்டு அலையும் அவல நிலையில் தவிக்க விடாமல், கைத்தறிக்கென நிரந்தரத் திட்டமொன்றை உருவாக்கித் தருவதன் மூலம் அரசாங்கத்தின் நிலையான பாதுகாப்பைத் தர இப்போதே அரசாங்கம் முன்வர வேண்டும். (தொடரும்)

கைத்தறியாளரைக் காணீர்!

1

நல்ல நல்ல துணி வகைகள் கையிலேந்தி
நடை பாதை, நடுத்தெருவில், கடைகளிலும்,
உள்ள விலை கூறிடுவார்—ஆனால் கூலி
உள்ளபடி கேட்காது குறைத்தே கேட்பார்,
கள்ள மில்லா உள்ளத்தோர், கவலையோடு
கஞ்சிக்கும், நூலுக்கும், காசு வேண்டி
தள்ளித் தள்ளி விற்றாலும், தரகர் "சாமி"
தயக்க மின்றி பிடிப்பார்கள் அவர் தருமசிந்தை
வெள்ளை மனத்தோர் நெய்யும், வர்க்கத்தாரின்
வேதனைகளொழிந்தின்ப முறும்நாளென்றே!

2

நூல் கிடைக்கவில்லை என்பார் சில நாள் கழித்தே
நூல் கிடைத்தும் துணி விற்கவில்லை, என்பார்
நாள் கணக்கில் பட்டினியால் வாடி வருவார்!
நல்லுணவு இல்லாது நலிவார்—குடும்பம்
வாழ வகையறியாது வழி நடை செல்வார்!
வழிதனிலே பிரிவார்—நள தமயந்தியைப்போல்!
ஆழ்கடலின் அலைகளைப் போல் அவர்கள் வாழ்வில்
அமைதி என்றும் அறியாரோ?.... அன்றி இந்தச்
சூழ்நிலைமை மாறியவர் சுகங்கள் கண்டே,
சுதந்திரத்தின் நற்பயனைச் சுவைத் துணர் வாரோ!!

3

வேதனைப்பட் டுழைத்திடினுங் கஞ்சியற்று
ஆலையிலே தொழிலாளர் கூலி கேட்டே
அடையாள 'ஸ்ட்ரைக்' செய்ததி கரித்திக் கொள்வார்.
வேலையிலே நேரங் குறைத்தால் தான் செய்வார்,
வேலையற்ற நாட்களுக்குங் கூலியைப் பெறுவார்.
நூலிழையை நூற்போர்க் கிந்நூதன உரிமை—ஆனால்
நூலிழையில் துணி செய்வோர்க் கெந்நாளுங் கொடுமை
வேலையற்று—வேலை செய்திடினும் நற்கூலியற்று,
காலை முதல் மாலைவரை ஓய்வு மற்று
கவலையுடன் வாழு மவரைக் காணீர்!! காணீர்!!!

—சேலம், சிவராமன்.

நாட்டுச் செய்தி

பாக்டரி, ஷாப் சட்டங்கள்!

சென்னை சட்ட சபையில் கேள்வியொன்றுக்கு தொழிலமைச்சர் பதில் கூறும்போது, நாற்றைம்பதற்கும்மேற்பட்ட தொழில் ஸ்தாபனங்களுக்கு பாக்டரி சட்டத்திலிருந்து விதி விலக்களித்துள்ளதாகக் கூறியிருக்கிறார். அப்படி விதிவிலக்களிக்கப் பட்ட தொழில்களும், தொழில் ஸ்தாபனங்களும் எவையென்பதுபற்றிய விவரங்கள் கொடுக்கப்படவில்லை நமக்குக் கிடைத்த செய்திகளின்படி.

என்றாலும், பாக்டரிசட்டத்தினின்று விதிவிலக்களிக்கப்பட்டிருக்கிறது ஒரு சில ஸ்தாபனங்களுக்கு என்பது மட்டும் அமைச்சரின் பதிலிலிருந்து ஊர்ஜிதமாகிறது.

இவ்வகையில் கைத்தறி பாக்டரிகளுக்கும், துணி அச்சுப்பட்டரைகளுக்கும் மேற்கண்ட விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற சம்பந்தப்பட்டவர்களின் கோரிக்கைகள் இன்றுவரை கவனிக்கப்படவில்லையென்பது மட்டும் உறுதிப்படுகிறது. கரூர் பவானி, திருப்பூர், ஈரோடு, பள்ளிபாளையம் போன்ற இடங்களில் உள்ள கைத்தறி பாக்டரிகள், துணி அச்சுப்பட்டரைகள்யாவும் பாக்டரி சட்டத்தின் கீழ் பலவித தொந்திரவுகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறது. அதேபோல ஷாப் சட்டத்தினாலும்.

இவைகளின் உரிமையாளர்களும், அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களும் ஆக இரு சாராருமே ஒன்றாகச்சேர்ந்தே அப்படிப்பட்ட விலக்குக் கோருகின்றனர். 10, 15 தறிகள்வைத்து ஒரு ஓலைக்கொட்டகையில் வேலை நடைபெறும். அங்கு பாக்டரி சட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்துவது அத்தொழில் ஸ்தம்பிப்பிற்கே உதவும். அன்றி தொழிற்சாலையாளர்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ உதவுவதாகாது.

ஷாப் சட்டத்தின்படி 8மணி நேரம்தான் வேலை செய்யவேண்டும். அதற்குமேல் வேலை செய்வதானால் "ஓவர்டைம்" என்ற அடிப்படையில் மிகுதி வேலையைக் கணக்கிடப்படவேண்டுமென்றெல்லாம் வற்புறுத்தப்படுகிறது.

உதாரணமாக ஒரு ஜமக்காளமோ, பெட்ஷீட்டோ நெய்து முடிக்க 10மணி நேரம் ஆகிறது என்று வைத்துக்கொள்வோம். அதை நெய்து முடித்தால்தான் அதற்குண்டான குறைந்த பட்ச கூலி நெசவாளிக்குக்கிடைக்கும் காரணம்; கைத்தறிபேக்டரியில் வேலைசெய்யும் நெசவாளிக்கு சம்பளமில்லை. குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்தால்தான் அன்றைய குடும்ப ஜீவனமும் நெசவாளிக்கு நடக்கும்.

அதேபோல தினசரி 10 அல்லது 15 பீஸ் துணிகளை சீட்டியாகவோ, சேலையாகவோ அச்சடித்துக் கூலி பெற்றால்தான் அச்சுத் தொழிலாளியின் குடும்ப வாழ்க்கையும் நடைபெறும். அப்படிச் ய்ய 10மணி நேரமல்ல 12மணி நேரமும் கூட வேலை செய்யத் தொழிலாளி தயாராக இருக்கிறான். அதை சம்பந்தப்பட்ட தொழிற்சாலை முதலாளியும் அனுமதிக்கத் தயாராக இருக்கும்போது இந்த ஷாப் சட்டம் குறுக்கே வந்து நின்று தடை செய்கிறது.

தவிர, இத்தொழில்கள் குடிசைத் தொழில்கள் என்பதும். "சீசன்" தொழில்கள் என்பதும் சர்க்கார் உணரவேண்டும். ஆகவே கைத்தறி பாக்டரிகள், துணி நூல், சாய அச்சுப்பட்டரைகள், ஆகியவைகளுக்கும் பாக்டரிசட்டம், ஷாப் சட்டம் போன்றவைகளிலிருந்து தொழிலாளியும், முதலாளியும் சேர்ந்துகோருகிற தொழில்ஸ்தாபனங்களுக்காவது குறைந்த பட்சம்விதிவிலக்களிக்கவேண்டுமென்ற கோரிக்கையை சர்க்கார் கவனித்து தக்கது செய்யவார்களென நம்புகிறோம்.

மத்திய கைத்தறி போர்டு: ஒரு எச்சரிக்கை?

கதர், கைத்தறி நெசவு ஆகிய தொழில்களுக்கு தனித்தனியான மத்திய போர்டுகள் நிறுவப் போவதாக மத்திய சர்க்கார் அறிவித்துள்ளனர். உத்தேச போர்டுகளின் அமைப்பிற்கான நோக்கம், மேற்கண்ட தொழில்களைப் பாதுகாப்பதும்; மில் ஜவுளித்

ஏஜனடுகள் தேவை

தொழில் போட்டியினால் நசித்துப்போகாமல் தடுப்பதுதான் என அறிவிக்கப்படுகிறது.

சர்க்காரின் நோக்கத்தையும், அதற்கான ஆலோசனைகள் கூற அமைக்கப்படுகிற ஸ்தாபன அமைப்புகளையும் நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

இதுபோன்ற போர்டு ஒன்று ஏற்கனவேயே பேராசிரியர் என். ஜி. ரங்கா தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பிரிவாகக் கைத்தறி ஆலோசனை போர்டும் இருந்துவந்தது. தமிழ்நாட்டு நெசவாளர்களின்சார்பாக திரு. எம். பி. நாச்சிமுத்து முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் அதில் பிரதிநிதித்வம் பெற்றுமிருந்தார். அந்த போர்டுகள் இதுவரை செய்த சிபார்சுகள் என்ன? வேலைகள் யாவை? அவை எத்தனை தடவைகள் கூடி ஆலோசித்தன? என்பதெல்லாம் கைத்தறியாளர்கள் முன் பகிரங்கப்படுத்தியாக வேண்டியது சர்க்காரின் கடமையாகிறது.

அப்பொழுதுதான் மேற்கொண்டு அமைக்கப்போவதாக அறிவிக்கப்படுகிற போர்டுகள் மீது இந்த ராஜ்யகைத்தறியாளருக்கு நம்பிக்கை பிறக்கும். அல்லாத பட்சத்தில் இம்மாதிரியான அறிவிப்புகளும், நடைமுறைகளும் கைத்தறியாளரைக் கண்துடைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளேயென எண்ணிவிட நேரிடும்.

மேலும், அமைக்கப்படும்போர்டில் கைத்தறியாளர்களின் உண்மை நலனில் அக்கறைகொண்டவர்களையே பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப்படவேண்டும். அல்லாமல்; மில் முதலாளிகளுக்கும், அவர்களது நலன்களுக்கும் "ஆமாம் சாமி" போடுகிற பகல்வேடதாரிகளைகைத்தறியாளர்களின் பிரதிநிதிகளாக எடுத்தால் அது சர்க்காரின் நோக்கம் சவக்குழி நோக்கிச் செல்லவே உதவி புரியுமென எச்சரிக்கிறோம்.

தவிர, சென்னை ராஜ்யத்திற்கு அப்போர்டில் அதிகப்பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும். பிரதிநிதிகளை சென்னைசர்க்கார் சிபார்சு செய்யும்போது ஏற்கனவே போர்டில் அங்கம் வகித்துவந்தவர்களின் சேவையும் மதிப்பிட்டு அவர்களிலும் நல்லவர்களை மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யுமாறும் கோருகிறோம்.

நூல் பங்கீடு ரத்து !

சென்னை ராஜ்யத்தில் கடந்த மாதம் வரை சட்ட பூர்வமாக அமலில் இருந்துவந்த "இன்பார்மல்" நூல் பங்கீட்டு முறையை தற்காலிகமாக மூன்று மாதகாலத்திற்கு சர்க்கார் ரத்துசெய்து உத்திரவு ஒன்று பிரப்பித்துள்ளனர். "நெசவாளர்களுக்கு அதிக நூல் கிடைக்கவே" இந்த ரத்து உத்திரவு போட்டிருப்பதாகராஜ்ய சர்க்கார்காரணம்கூறுகின்றது.

இந்த உத்திரவு, நெசவாளர்களுக்குப்போதுமான நூலை அளிக்க ஓரளவு உதவினாலும், இன்றுள்ள கைத்தறிதுணி விலையிறக்கத்தின் காரணமாகவும், மார்க்கெட்மந்தத்தாலும் பாதித்துநிற்கும் நெசவாளிக்கு பாதுகாப்பாக இல்லையென்றே நமக்கு வரும் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. அதே காலத்தில் சில்லரை நூல் வியாபாரிகளுக்கு வேண்டுமானால் அவர்களை நஷ்டப்படுவதினின்று காப்பாற்றியிருக்கிறது என்று சொல்லலாம்.

அலாட்மெண்ட் செய்யப்படுகிற நூலின் விலையைவிட, வெளியே நிர்ணய விலைக்குக்குறைவாக நூல் கிடைக்கும்போது எந்த நெசவாளிபோய் வியாபாரியிடம் நூல் வாங்கப்போகிறார்கள். அலாட்மெண்டை எடுத்துநஷ்டத்திற்காவது வியாபாரம் செய்து தங்களுக்குள்ள லைசென்சையாவது காப்பாற்றிக்கொள்ளலாம் என்று எண்ணுகிற சில்லரை நூல் வியாபாரிகளை வேண்டுமானால் இந்த ரத்து உத்திரவு பாதுகாக்கலாமே தவிர, உண்மையில் சாதாரண நெசவாளர்களுக்கு இதன்மூலம் சர்க்கார் எதிர்பார்க்கும் பலன் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லமுடியாது.

தவிர, இந்த ரத்தின் மூலம் நெசவாளர்களுக்கு நேரடியாக நூலை மில் முதலாளிகள் விற்று இடைத்தட்டில் லாபமடிப்போர்களுக்கு இடந்தராமல் செய்து அதன் மூலம் மேலும்நெசவாளர்களுக்குக் குறைவான விலையில் நூல் கிடைக்க ஏதுவாக இருக்குமென ராஜ்ய சர்க்கார் கருதுகிறது. சர்க்காரின் இந்நோக்கத்தை தென் இந்திய மில் முதலாளிகள் ஏற்கவில்லையென நன்கு தெரிகிறது.

அவர்கள் நெசவாளர்களுக்கு சில்லரையாக கட்டுக் கணக்கில் நூலை விற்பதால் சிரமம் ஏற்படுமென்றும், தங்களுக்கு பேல்கணக்கில் விற்பதுதான் சுலபமாக

சேலம் கைத்தறிமுன்னேற்றசங்க புதியநிர்வாகஸ்தர்கள்.

சேலம் செவ்வாய்ப் பேட்டையிலுள்ள கைத்தறி முன்னேற்ற சங்கத்தின் கூட்டம் 16—6—52 தேதியன்று நடைபெற்றபோது கீழ்க்கண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: பி. ஏ, சுப்ரமணிய செட்டியார். உபதலைவர்: பி. பி. வேலாசாமி செட்டியார், காரியதரிசி (நெசவாளரின் புதுமைக் கவியும் எழுத்தாளருமான) கே. பி. இ. சிவராமன், பொக்கிஷதார்: பி. ஜி. சின்னுசாமி செட்டியார். கமிட்டி மெம்பர்கள்: டி. ஏ. குப்புசாமி செட்டியார், எஸ். ஜி. வேலாசாமி செட்டியார், கே. எம். காளியப்பன். க. மு- நாராயணசாமி செட்டியார், கே. எஸ். நாராயணசாமி செட்டியார், எம். ஆர். சித்தைய செட்டியார்.

ருக்குமென்றும் கூறுகிறார்கள் அதேகாலத்தில் நூல்கண்ட்ரோல் தீவிரமாக அமல்படுத்தும்போது. மட்டும் தங்கள் மில்களுக்கும்நேரடியாக நெசவாளர்களுக்கு நூலை விற்க சில்லரை விற்பனை டெப்போக்கள் திறக்க அனுமதி வேண்டுமென்று கோருவதில் அவர்கள் தவறியதேயில்லை. எனவே சர்க்காரின் உத்தேச இந்த நோக்கமும் நடைமுறையில் நிறைவேறும் என்பதற்கான அறிகுறி சிறிதும் இல்லை

எனவே, இந்த நூல் பங்கீடு ரத்து உத்திரவால் நெசவாளி உண்மையான பலனை அனுபவிக்கவேண்டுமென்றால், அவனால் உற்பத்தி செய்யப்படுகிற துணிக்கு நல்ல விலையும், கூலியும், நிச்சயமான மார்க்கெட்டும் கிடைக்கவழி செய்ய சர்க்கார் பொறுப்பேற்றாக வேண்டும். அதில்லாதவரை இந்த ரத்து உத்திரவால் நெசவாளி லாபமடையவோ, பயன் பெறவோ முடியாது என்று நிச்சயமாக கூறலாம்.

நூல் விலைகள், சர்க்காரின் நிர்ணய விலையை விட குறைந்து வரும் சந்தர்ப்பத்தில் இவ்வுத்திரவு போடப்பட்டதால், சில குறிப்பிட்ட நெம்பர் நூல்களின் விலைகள் மீண்டும் உயர்ந்து கொண்டே போயிமிருக்கிறது என நூல் மார்க்கெட் நிலவரங்களிலிருந்து அறியமுடிகிறது. ஆகவே இவ்வுத்திரவை நெசவாளர்களுக்கு நற்பயன் தரும் வகையில் அமுலாக்க ராஜ்ய சர்க்கார் திருத்தியமைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென கோருகிறோம்.

குறைந்த விலை நூல்!

ஆந்திர தேசத்தை சேர்ந்தவரும், சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் காங்கிரசின் பொதுச் செயலாளருமான ஸ்ரீ பிரகடகோட்டையா எம்.எல்.ஏ அவர்கள் இப்போது அடிக்கடி சென்னை சட்ட சபையில் ராஜ்ய கைத்தறி நெசவாளர்களின் குறைகளை எதிரொலித்துப் பேச ஆரம்பித்துள்ளார்.

அவர் சமீபத்தில் சட்ட சபையில் நூல் வினியோகம் சம்பந்தமாகப் பல கேள்விகள் கைத்தொழில் மந்திரியைக் கேட்டுத் திணற வைத்திருக்கிறார். அவைகளில் ஒன்று: "உள் நாட்டுப் பஞ்சினால் தயாரிக்கப்படும் குறைந்த விலை நூலையே கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைக்கும்படி சர்க்கார் ஏற்பாடு செய்யுமா? என்பது. இதற்கு மந்திரி பதில் கூறும்போது 'இவ்விஷயம்பற்றி மத்திய சர்க்காருடன் கலந்து ஆலோசனை செய்யப்படும்." என்று கூறியுள்ளார்.

நூலின் நிர்ணய விலை, பஞ்சு விலையை அனுசரித்து ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. இந்தியப் பஞ்சினால் தயாரிக்கப்படும் நூலுக்கும், அமெரிக்கப் பஞ்சினால் தயாரிக்கப்படும் நூலுக்கும் அவைகள் ஒரே நெம்பராக இருந்தாலும் விலை வித்யாசமாக—ஏற்றத் தாழ்வாக நிர்ணயிக்கப்படுகின்றன பஞ்சு விலையின் அடிப்படையில்.

இந்திய பஞ்சினால் தயாரிக்கப்படும் குறைந்த பட்ச விலையுள்ள நூல்களை, மில்கள் பெரும்பாலும் தங்களுடைய நெசவுப் பகுதிக்கு எடுத்துக்கொள்வதாகவும் அமெரிக்கப் பஞ்சினால் தயாரிக்கப்படும் அதிகபட்ச விலையுள்ள நூல்களை வெளியே கைத்தறி நெசவாளர்களுக்குவிற்பதாகவும் இதனால் கைத்தறி நெசவுத் துணிகளின் விலைகள் மில், துணி

திருப்பூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க மகா சபைக் கூட்டம்.

திருப்பூர் கைத்தறி நெசவாளர்கூட்டுறவு சங்கத்தின் மகா சபை கூட்டம் 9—6—52ந்தேதி திருப்பூர் சேட் ஆபீஸ் கட்டிடத்தில் ஸ்ரீ எஸ்.எஸ். சுந்திரஞ்செட்டியார் தலைமையில் நடைபெற்றது அதுசமயம் 1950, 51ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையையும் ஆடிட் சர்டிபிகேட்டையும் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. 1950-51ம் ஆண்டின் நிகர லாபம் ரூ. 90954யை பைலாப்படி பிரிவினை செய்யப்பட்டது. அதில் மெம்பர்கட்கு போனசாக ரூ. 23380ம் டிவிடெண்டாக ரூ. 2888-7-0ம் பட்வாடா செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் மெம்பர்களின் குழந்தைகள் கல்வி வசதிக்காக பொதுநல நிதியிலிருந்து ரூ 10000த்தை எல்லோருக்கும் விகிதாசாரமாக பட்வாடா செய்ய தீர்மானிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ பரமானந்தம் செட்டியார், ஸ்ரீ சவுண்டப்ப செட்டியார்; ஸ்ரீ பழனிசாமி செட்டியார், ஸ்ரீ பொன்னுசாமிசெட்டியார் முறையேகோவை-நீல்கிரி சென்ட்ரல் பேங்கு, சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் சங்கம்; குண்டக்கல் கூட்டுறவு ஸ்பின்னிங் மில்ஸ், கோவை கூட்டுரவு அச்சுக்கூடம் இவைகளுக்கு டெலிகேட்டுகளாக நியமனம் செய்யப்பட்டது. அடுத்து வரும இரண்டு ஆண்டுகளுக்கு தேர்தல் மூலம் கீழ்கண்டவர்கள் நிர்வாகஸ்தர்சளாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 13—6—52ந் தேதி நடந்த நிர்வாக சபை மீட்டிங்கில் ஸ்ரீ எஸ். சுப்ரமணியம் அவர்கள் தலைவராகவும், ஸ்ரீ டி. கந்தசாமி செட்டியார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஸ்ரீ எஸ். சுப்ரமணியம், டி. கந்தசாமி செட்டியார், எஸ். தண்டபாணி முதலியார், எம். பழனிசாமி செட்டியார், எம். சுப்ரமணியம், வி. சின்னப்ப செட்டியார், கே. பெருமாள், என். மல்லிசெட்டியார், எஸ். வீரப்ப செட்டியார்.

யோடு போட்டியிட்டு விற்க முடியாமல் தேங்கி, நெசவாளர்களை மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்திலாழ்த்துவதாகும். எனவே காம்பொசிட் மில்கள்-அதாவது நூற்பும் நெசவும் நடத்துகிற மில்கள் அதிகப் பட்ச விலையுள்ள நூலைத்தங்களின் நெசவுப் பிரிவுக்கு எடுத்துக் கொண்டு குறைந்தபட்ச விலையுள்ள இந்தியப்பஞ்சினால் தயாரிக்கப்படும் நூலையே கைத்தறி நெசவாளர்களுக்கு வினியோகிக்க வேண்டுமென்றும் வற்புறுத்துவதே ஸ்ரீ கோட்டையா அவர்களின் கேள்வியின் நோக்கமாகும்.

இந்த கருத்தையே தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சம்மேளனமும் ராஜ்ய சர்க்காரிடம் வற்புறுத்தியுள்ளதாகப் பத்திரிகை அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது

இந்த நியாயமான கோரிக்கையை ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுவதோடு, இப்பிரச்னை மீது மத்திய சர்க்காரைத் தீவிரமாக வற்புறுத்தி இம்மாகாண கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியாவது தொடர்ந்து கிடைத்து வரவும், அவர்களது உற்பத்திப்பொருளான ஜவுளி, மில் துணிப்போட்டியிலிருந்து மீளவும் நல்லதொரு முடிவுகாண இன்றே முயற்சிக்க வேண்டுமென மேற்கண்ட கோரிக்கையை ஆதரித்து நாம் பலமாக வற்புறுத்துகிறோம.

[14-ம் பக்கத்தொடர்ச்சி]

மத்திய கூட்டுறவு சங்க அலுவலகத்தின் நேர் மேற்பார்வையிலிருக்கும் (கலெக்டிங் வீவிங் சென்ட்டர்ஸ்) கூட்டுறவு சேகரிப்பு கேந்திரங்களின் பயன் முறை பற்றிய பிரச்னை கிளம்பியது. இந்த 15ம் ஆண்டு விழாவில் மொத்தமுள்ள ஆறு கூட்டுறவு சேகரிப்பு கேந்திரங்களின் லாப நஷ்டப்புள்ளி விவரங்களைக் கீழே தருகிறோம்!

	மொத்த தறிகள் (30-6-49	30-6-50)	லாபம்	நஷ்டம்
சேலம்	1004	655		12,141-14.6
சங்கரன் கோயில்	971	838	6621-8-3	
அருப்புக்கோட்டை	294	164		159-2-1
திருநாகேசுவரம்	137	134	1556-13-10	
காலஹஸ்தி	197	149		10,539-7-0
கூடூர்	227		1340-2-8	
	2830	1940	9518-8-9	22,840-7-7

இந்த ஆண்டின் இறுதியின் கூடூரிலுள்ள சேகரிப்பு கேந்திரம் மூடப்பட்டது. ஆண்டு இறுதிக்குள் 890 தறிகள் குறைந்திருக்கின்றன! மொத்த நஷ்டம் 13 321-14-10 மத்திய கூட்டுறவு சங்கத்தின் நேரடி மேற்பார்வைக்கு பாத்திரமான இந்த சேகரிப்பு கேந்திரங்களிலிருந்து தேவையான ஜவுளிரகங்களை நேரடியாக உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கத்தில்பலியானநஷ்டந்தான் இந்த ரூ 13,321-14-10. நெசவாளியின் பிரதிநிதிகளின் பொது நல அக்கரையுள்ள கூட்டுறவு சங்கத்தின் மேற்பார்வையோ, லாபமே கருத்தாயுள்ள தனிப்பட்ட முதலாளிகளின் போட்டி மனப்பான்மையோயில்லாத தொழில் ஸ்தாபனத்தின் வளர்ச்சி குறுகல்தான் இந்த சேகரிப்புகேந்திரங்கள். இவை துவக்கபட்ட நோக்கம் வரவேற்கத்தக்கதேஆனால்நோக்கத்திற்கேற்பமாற்றுதிட்டம் தேவைப்படுகிறது.

1949-50ம் ஆண்டு அறிக்கை கைத்தறி ஜவுளியின் நெருக்கடியான சமயத்தில் கூட்டுறவின் தலைமைப்பீடங்கள் ஆற்றிய பணியின் உயர்வையும், ராஜ்ய சங்கத்தின் அலுவலகத்தினை நிர்வகிக்கும் பிரதமநிர்வாகியின (பிசினஸ் மேனேஜர்) திறமையையும், மாகாண கூட்டுறவு ரெஜிஸ்ட்ரார் போன்ற அரசாங்க அதிகாரிகளின் திறந்த ஒத்துழைப்பின் ஆழத்தையும் அளவிட்டுக்காட்டுகிறது!

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும்
அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள் துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், தலைவர்.

“வறுமையின் கோரம் இங்கும் வளர்ந்து வருகிறது”

பஞ்சநிவாரண திட்டத்தை ராமநாதபுரம் ஜில்லாவிற்கும் விஸ்தரிக்கவும்

சென்னை மாகாண தொழில் அமைச்சர் டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்களுக்கு இராமநாதபுரம் ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா சத்திரப்பட்டியிலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் சமர்ப்பித்துக் கொள்ளும் மகஜராவது:—

உயர் திரு ஐயா,

சென்னை சர்க்காரின் புதிய கைத்தறி நெசவாளர் நிவாரண திட்டம் இராமநாதபுரம் ஜில்லாவில் உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுகிறோம். ஏனெனில் இம்மாகாணத்திலுள்ள வேறு எந்த நெசவாளர் பகுதியைக் காட்டிலும் இப்பகுதி சிறப்புற்று விளங்கவில்லை. அதற்கு மாறாக வறுமையின் கோரம் தினேதினே வளர்ந்து வருகிறது. உதாரணமாக இங்கு மட்டும் சொஸைட்டிகள், வியாபாரிகள், தனிப்பட்ட தறிகாரர்கள் ஆகியோரிடம் சுமார் ரூ.3 லட்சம் பெறுமானஜவுளி தேங்கியுள்ளதால் ஏற்கனவே சொந்தமாக நூல் வாங்கி நெய்து வந்தவர்களும் கூட இன்று மூலதனமின்றி தறி நெய்ய லாயக்கற்றுள்ளனர். குறிப்பாக ரூ. 15க்கு விற்று வந்த காடாபீஸ், இன்று சுமார் 7000 உருப்படிகள் இதன் மதிப்பு சுமார் ஒரு லட்ச ரூபாயாகும், கேட்பாரற்று தேங்கியுள்ளதெனில், சரக்குத் தேங்கியதின் விபரீத விளைவு நன்கு புலனாகும். மேலும் இங்கிருந்து 15 மைல் தூரமுள்ள கருமலைக்குச் சென்று விறகு ஒடித்து வந்து சுமை பத்தணவிற்கு விற்று வயிறு வளர்க்கும் குடும்பங்கள் பெருகி வருகின்றன. காட்டு விறகொடித்து காலம் தள்ளுவது இப்படியே இன்னும் எத்தனை நாள்?

ஆகவே இங்குள்ள யதார்த்தமான நிலையைத் தெரிந்து தயவு செய்து தாமதமின்றி கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு இதில் கையொப்பமிடும் நாங்கள் ஒவ்வொருவரும் வற்புறுத்தி தங்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

1. ஜுலை 5 தேதி முதல் அமுலுக்கு வரும் புதிய நெசவாளர் நிவாரண திட்டத்தை இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த இப்பகுதியிலும் உடனடியாக கண்டிப்பாய் அமுலுக்கு கொண்டுவர வேண்டும்.
2. மத்திய சர்க்காரின் அனுமதி பெற்று நூல் விலையை இன்றுள்ள விலையிலிருந்து 50 சதமாகக் குறைக்க வேண்டும்.
3. இங்குள்ள தேவைக்குப் போக மீதியுள்ள நூலைத்தான் ஏற்றுமதி செய்யவேண்டும்.
4. தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை சர்க்கார் பொறுப்பில் கொள்முதல் செய்து அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு சரக்கு உடமையாளர்களுக்கு சர்க்கார் மான்யம் வழங்க வேண்டும்.
5. அன்னிய நாட்டுத் துணியை இங்கு இறக்குமதி செய்ய அனுமதிக்ககூடாது.
6. கைத்தறித்துணிக்கு விற்பனை வரி விதிக்கக் கூடாது.
7. எல்லா கூட்டுறவு சங்கங்களுக்கும் தேவையான நூல்கள் போதுமான அளவு கொடுத்து, கூட்டுறவு சங்கங்களைப் பெருக்க வேண்டும்.
8. உள் நாட்டுப் பருத்தியில் தயாராகும் நூல்களை கைத்தறிகளுக்கு வழங்குவதின் மூலம் கம்போஸிட் மில்களுக்கு கொடுக்கும் நூல் விலையைவிட 20% குறைந்த விலையில் கைத்தறிகளுக்கு நூல் கிடைக்கச் செய்ய வேண்டும்.
9. சர்க்காருக்குத் தேவையான துணிகளை அதாவது ராணுவம், போலீஸ்; சிறைக்கைதிகள், ரயில்வே—போஸ்டல் சிப்பந்திகள், ஆஸ்பத்திரி நோயாளிகள், நகர சுத்தி தொழிலாளிகள், சர்க்கார் சிப்பந்திகள் ஆகியோருக்கு தேவையானவற்றிற்கு கைநெசவுத் துணிகளையே வாங்க வேண்டும்.
10. வெளி நாடுகளில் கூட்டுறவு எம்போரியங்கள் ஏற்படுத்துவதன் மூலமும் கைத்தறித் துணிக்கு மார்கெட் தேட பல நாடுகளுக்கும் நெசவுத் தொழிலாளர் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களை சர்க்கார் செலவில் அனுப்புவதன் மூலம் நிரந்தர பரிகாரம் தேடவேண்டும்.

மேற்கண்ட அத்தனை கோரிக்கைகளையுமே சரிவர நிறைவேற்றினால்தான் நெசவாளர் பிரச்னை தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் தீர வழியேற்படு மென்றும் இதைச் செய்ய சர்க்கார் துரிதமாக முன்வர வேண்டுமென்றும் நாங்கள் அனைவரும் ஏகமனதாக தங்களை வேண்டுகிறோம்.

குறிப்பு: மேற்கண்ட மகஜரில் நிறையகை எழுத்துக்கள் வாங்கி சென்னை, தொழில் மந்திரிக்கும் ஸ்தல எம். எல். ஏ. திரு. டி. கே. ராஜூவிற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கைத்தறி

28 MAY 1955

வேட்டி புடவைகள் நெய்திடுவான் — அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப்பஞ்சம்
— திருமூர்த்தி.

● கோவை 15—7—52 ●

பூரண வரிவிலக்கே தேவை!

துணி, நூல் ஆகியவைகளுக்கு கூலிக்கு சாயமிடுவதற்கும், அச்சிடுவதற்கும் முன்பிருந்த சர்க்கார் "ஒப்பந்த வேலை" யென்ற தலைப்பில் விற்பனை வரி விதித்து வசூல் செய்து வந்தனர். இந்த வரி, சாதாரண ஏழை நெசவாளிகளையும், கைத்தறித்துணி வர்த்தகர்களையும், உபயோகிக்கும்பொதுமக்களையும் பாதித்து வந்தது.

கூலிக்கு சாயமிடுவதோ, அல்லது துணியை அச்சிடுவதோ எவ்விதத்திலும் வர்த்தகமாகாது; ஒப்பந்த வேலையுமாகாது; ஆகவே விற்பனைவரி இந்த குடிசைக் கைத்தொழில்களுக்கு விதிக்கக் கூடாதென சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்கள் மாகாண ரீதியாக அங்கங்கே ஆட்சேபணைகளைத் தங்களது ஸ்தாபனங்கள் மூலம் தொடர்ந்து சர்க்காருக்குத் தெரிவித்து வந்தனர்.

மேலும், இந்தத் தொழிலே வளர்ச்சியடையாமல் இருக்கும்போது, அவ்வகையில் சர்க்கார் தங்களுக்கு ஊக்கமளித்து இத்தொழில் வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டியிருக்க, இது போன்ற வரி முறைகளைப் போட்டு தங்கள் தொழில் நசித்துப்போகச் செய்கின்றனரே யென்றும் முறையிட்டு வந்தனர். ஆனல் சர்க்கார் மட்டும் சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் ஆட்சேபணையைச் சிறிதும் செவி கொடுத்துக் கேட்காது, வரிவிதித்து அதைக் கிட்டி போட்டு வசூல் செய்வதிலேயே கவனம் செலுத்தி வந்தனர்.

திருப்பூர் போன்ற இடங்களில் சாய, அச்சுத்தொழிற்சாலையாளர்களிடம் வரி வசூல் செய்வதில் கைது வாரண்டுகள், ஜப்தி வாரண்டுகள் போன்றவைகள் எல்லாம் கூட அமுலாக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

1951 டிசம்பர் மாதம் 16ம் தேதியன்று சென்னை ராஜ்ய சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் முதல் மகாநாடு திருப்பூரில் கூடியது. மகாநாட்டிற்கு ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நானூருக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டார்கள். தங்களின் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும், இடைஞ்சலாகவும் இருக்கும் விற்பனை வரி முறைக்குக் கல்லறை கட்டியாக வேண்டுமென்ற சபதத்தை அவர்கள் அதில் மேற்கொண்டனர்.

மகாநாட்டில் கலந்து கொண்ட ஸ்ரீமான்கள் டி. எஸ் அவிஞசிலிங்கம் செட்டியார் எம். பி. அவர்களும், தஞ்சை சர்தார் வேதரத்னம் பிள்ளையவர்களும் கூலிக்கு வரி விதித்துள்ள குருட்டுத்தனமான செயலைக் கண்டித்தனர். இந்த அடாத செயலை சர்க்காரிடம் எடுத்துக்கூறி பரிகாரம் தேடித்தரத் தாங்கள் தயார் என்றும் கூறினர். இது தேர்தல் காலத்தில்.

தேர்தல் முடிந்துவிட்டது. மத்தியிலும் மாகாணங்களிலும் சாங்கிரஸ் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது இன்று. பல முறை ராஜ்ய சர்க்காரின் நிதி அமைச்சரையும், மற்றுமுள்ள இதர சர்க்கார் முக்யஸ்தர்களையும், டெக்ஸ்டைல் கமிஷனரையும், எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய சர்க்காரின் தொழில், வர்த்தக அமைச்சர் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களையும் இந்த ராஜ்ய சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் தலைமைச் சங்கப் பிரதிநிதிகள் பன்முறை பேட்டி கண்டும், மகஜர் சமர்ப்பித்தும்விட்டனர்.

ஒரு மாகாண மகாநாடு நடத்தி—அதில் பல முக்கிய தலைவர்களை அழைத்து வைத்துத் தங்களின் கஷ்ட நஷ்டங்களை வெகு தெளிவாக எடுத்துக் காட்டி உணர வைத்து—அவர்களும் சாய, அச்சுக் கூலித் தொழில்களுக்கு விற்பனை வரி விதிப்பது அநீதிதான் என ஒப்புக்கொண்ட பிற்பாடு—சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பேட்டி கண்டு மகஜர்கள் சமர்ப்பித்த பிற்பாடு—இத்தனை முஸ்தீப்புகளுக்கும் பின் கிடைத்த பலன் என்ன என்றல் 1950-51, 1951 52 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் விற்பனைவரியிலிருந்து விதிவிலக்களித்து சர்க்கார் இரண்டு தேதிகளில் உத்திரவிட்டுள்ளதுதான். இதற்காகநாம் ராஜ்ய சர்க்காருக்கும், நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்களும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

என்றாலும், இந்த அரைகுறை ஏற்பாடுகள் மூலம், ராஜ்ய சாய அச்சுத் தொழிற்சாலையாளர்கள் திருப்தியடைந்து விடுவார்களென சர்க்கார் எண்ணுவாளுல் அது மிகப்பெரிய தவராகவே முடியும் என்பதையும் நாம் எடுத்துக் காட்ட விரும்பவே செய்கிறோம்.

நம் ராஜ்யத்தில் நடைபெற்று வரும் சாய, அச்சுத் தொழில்கள் கூலிக்காக நடத்தப்படுவைகளாகும் என்பது சர்க்காருக்குச் சொல்லிக் காட்டவேண்டியதில்லை. அப்படியிருக்கும் போது கூலிக்கு விற்பனை வரி விதிப்பது என்பது சட்டரீதியாகவே தவறு என நாம் கருதுகிறோம். கூலி விற்பனையாகாது என்பதை சர்க்கார் ஒப்புக்கொண்டுதான் இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் வரி விதிவிலக்களித்திருக்கின்றனர் என்றும் நாம் நம்புகிறோம்.

மேலும், இந்த சாய, அச்சுத் தொழில்களானது முழுதும் கைத்தறி ஜவுளி மார்க்கெட்டையே நம்பிப் பிழைக்க வேண்டியிருக்கிறது. கைத்தறி ஜவுளி மார்க்கெட்டில் ஏற்படுகிற வியாபார மந்தம், நூல் நெருக்கடி போன்ற ஒவ்வொரு தாக்குதல்களுக்கும் இத் தொழில்களும் ஆளாக நேருகிறது. தொடர்ந்து இந்தக் கூலித் தொழில், இப்பிரச்னைகளுக்கு இலக்காகி பாதித்தும் வந்திருக்கிறது. எந்தத் தொழிற்சாலையும் ஆண்டு முழுதும் தொடர்ந்து சாய, அச்சு வேலைகள் செய்து வந்து லாபகரமாக நடந்தேறியிருக்கிறது என்று சர்க்காரால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவ்வளவு தூரம் கைத்தறித்தொழில், வர்த்தக மந்தங்களினால் இத்தொழில் கடந்த பல ஆண்டுகளாகப் பாதித்து க்ஷீணித்துப்போயிருக்கிறது.

இந்நிலையில் இதற்கு விற்பனைவரித்தொல்லையும் சேர்ந்து அத்தொழில் தலை தூக்க முடியாமல்—வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் திண்டாடித் திணறிக் கொண்டு உள்ளது. இத்தொழிற்சாலையை நடத்துகிறவர்களில் பெரும்பாலோர் லாபகரமாகத் தொழில் நடக்காததின் காரணமாக இன்றோ அல்லது இன்னும் சிறிதுநாளிலோ தொழிலையே நிறுத்திவிட வேண்டிய அளவில் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட நிலைமையேற்பட்டால் அதனால் பல ஆயிரக்கணக்கான சாய, அச்சுத் தொழிலாளர்கள் வேலையிழந்து குடும்பம் குடும்பமாகப் பட்டினி கிடந்து இறக்க நேரிடும் என்பதையும் நாம் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

எனவே, சட்ட பூர்வமாக பரிபூர்ண விற்பனை வரி விலக்கு சாய, அச்சுத்தொழில்களுக்கு சர்க்கார் அளித்து இந்தத் தொழிலைப்பாதுகாக்க இச்சந்தர்ப்பத்தில் முன் வந்தாக வேண்டும். பெரியதொரு நெருக்கடியிலிருந்து இந்தத் தொழில்களையும், அதில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களையும பாதுகாத்தாக வேண்டும்.

சாய, அச்சு கூலித் தொழில்கள் எக்காரணம் கொண்டும் ஒப்பந்த வேலையல்ல என்ற முறையில் சட்டத்திலேயே திருத்தம் செய்தாக வேண்டும் என்கின்ற ராஜ்ய சாய, அச்சுத் தொழிற்சாலையாளர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, உடனடியாக அதை நிறைவேற்றி வைக்குமாறு சர்க்காரை நாம் வற்புறுத்துகிறோம். சென்று போன ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு விதி விலக்களித்து விடுவதால் மட்டும் இத்தொழில்களைப் பாதுகாத்து விட்டதாகாது.

தவிர, விதிவிலக்களிக்கப்பட்ட ஆண்டுகளுக்கு ஏற்கனவே கடன் பிடுங்கிக் கட்டிவிட்ட விற்பனை வரித்தொகைகளை சம்பந்தபட்டவர்களுக்கு உடனே திருப்பிக்கொடுப்பதில் வெகுவேகமான ஏற்பாடுகளையும் சர்க்கார் செய்யவேண்டும். வரித்தொகைகள் வசூலிப்பதில் காட்டும் அக்கரை அதைத் திருப்பித்தருவதில் அதிகாரிகள் காட்டுவதில்லையெனப் பொதுவாகப் புகார்கள் கூறப்படுகின்றன. இதுவீணான அதிருப்தியையே சர்க்கார் மீது சிருஷ்டிக்க உதவும். எனவே சர்க்கார் உடனடியாக இது விஷயத்தையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். ●

உணவுகண்ட்ரோல் நீக்கத்திற்கு பாராட்டு

சேலம் கைத்தறி முன்னேற்றசங்க தீர்மானங்கள்.

சேலம் கைத்தறி முன்னேற்ற சங்கத்தின் புதியநிர்வாகக் கமிட்டி 16—6—52ல் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.

(1) உணவுகண்ட்ரோலை உடனடியாக இம் மாகாணம்முழுமையும் நீக்கிவிட்டமைக்காக, ஸ்ரீ இராஜாஜீ அவர்களை மிகமிகப்பாராட்டுகிறது:

(2) கைத்தறி ஆடைகளையே பொதுமக்கள் விரும்பி வாங்கி உபயோகப் படுத்தவேண்டுமென்று, சென்ற இடங்களிலெல்லாம் ஸ்ரீமான் இராஜாஜீ அவர்கள் பொதுமக்களுக்குவேண்டுகோள் விடுத்து வருவதைக் கண்டு, சங்கம் தனது நன்றியறிதலை ராஜாஜீ அவர்களுக்குமிகப்பணிவோடு தெரிவித்துக் கொள்கிறது.

(3) தற்சமயம் தேங்கிக் கிடக்கும் கைத்தறி ஜவுளிகளை சர்க்காரே கொள்முதல் செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று, மத்திய, மாகாண சர்க்கார்களை இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

நிர்வாகக்கமிட்டியின்கூட்டத்திற்கு ஆர். பி. நடராஜன் அவர்கள் தலைமை வகித்தார். காரியதரிசி கே. பி. இ. சிவராமன் வந்தனோபசாரங்கூறகூட்டம் முடிந்தது. ●

ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்க மகாசபையின் 1949-50ஆண்டறிக்கை மீது ஒரு கண்ணோட்டம்.

"மாது"

நெருக்கடியான நிலைமைக்கிடையே பதினைந்தாம் ஆண்டு விழாவை, சென்னை மியூசியம்தியேட்டரில் நம்ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தார் கொண்டாடியிருக்கிறார்கள். நம் ஆந்திர வட்டார கூட்டுறவு சங்க பிரதிநிதிகளே பெரும்பாலும் தங்கள் கருத்துக்களைத் துணிந்து வந்திருந்த பிரதிநிதிகள் முன் வைத்து அவ்விழாவில் விளக்கினர். தமிழ் நாட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் வழக்கம் போல வாயில்லாப் பூச்சிகளாக மௌனம் சாதித்து நடந்து கொண்டனர்.

கைத்தறி மந்தப் படுகுழியில் குதிக்க இருந்த அவலக்காட்சியை நம்முன் சமர்ப்பிக்கிறது சென்னைராஜ்ய கூட்டுறவு சங்கத்தின் 1949-50ம் ஆண்டு அறிக்கை, அதில் கூட்டுறவு சங்க வளர்ச்சியின் ஏற்ற நிலையும் தொலைவில் தெரிகிறது. பரந்த கூட்டுறவு ஸ்தாபன ரீதியாக வளரும் அரும்புக்கு அரசாங்கத்தின் நிலையான பாதுகாப்புத் தேவை என்பதையும் தெளிவாக்குகிறது அந்த ஆண்டு அறிக்கை.

அறிக்கையில் புள்ளி விவரங்கள் பேசுகின்றன. 1950ம் ஆண்டு ஜூன் முடிய கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து வேலை செய்யும் தறிகளின் மொத்த எண்ணிக்கை 1, 43, 227. பெரும் எண்ணிக்கை என்று முன்வரிசையில் நிற்கிறது கிழக்குகோதாவரி ஜில்லா. கிழக்குகோதாவரி ஜில்லாவில் மட்டும் 18,300 தறிகள் வேலைசெய்கின்றன. உரிமைச்சங்கொலி முழக்கிய சேலம் ஜில்லா இரண்டாவதாக அணிவகுத்து நிற்கிறது. சேலம் ஜில்லாவில் மட்டும் 13, 150தறிகள் வேலை செய்கின்றன. இந்தியாவின் லங்காஷயரான கோவை கீழ் வரிசையில் நிற்கிறது; கோயமுத்தூர் ஜில்லாவில் மொத்தம் 12,339 தறிகள் கூட்டுறவில் வேலை செய்கின்றன.

நம் ராஜ்ய கூட்டுறவு வட்டத்தில் கேந்திரஸ்தானம் வகிக்கிறது சோமப்பாவின் எமிங்கனூர் கூட்டுறவு சங்கம். எமிங்கனூர் கூட்டுறவு சங்சத்தின் கீழ் 1669 தறிகள் பணியாற்றுகின்றன. நம் ராஜ்ய தலைநகரான சென்னையிலுள்ள சைதாப்பேட்டை அடுத்த கூட்டுறவு கேந்திரஸ்தானமாகும்; சைதாப்பேட்டை கூட்டுறவுசங்கத்தின் அணைப்பில் 1143 தறிகள் வேலை செய்கின்றன. கடைசி கூட்டுறவு கேந்திரஸ்தானம் எலூரு; எலூரு கூட்டுறவில் 946 தறிகள் வேலை செய்கின்றன.

இந்த குறிப்பிட்ட சில கேந்திர ஸ்தானங்களை உற்றுப்பார்த்து, அவற்றின் வளர்ச்சியினையும், பெருக்கத்திற்குச் சாதகமாக அமைந்துள்ள சூழ்நிலையையும், கூட்டுறவு வலிமையையும் உணர்ந்து மற்ற கூட்டுறவு சங்கங்களும் வளர்ச்சி ஓட்டப்பந்தயத்திற்கு காலப்போக்கில் தயாராக்கிக்கொள்ள வேண்டும்!

ஆண்டு அறிக்கையில் பளிச்சிடும் மற்றொரு புள்ளி விவரம் ரிசர்வ் நிதி! ஆபத்தில் அபயமளிக்கும் சுரபி இது. ஒருஸ்தாபனத்தின் வளர்ச்சியின் அளவுகோல் கூட்டுறவு உலகத்தின் மின்னும் துருவ நட்சத்திரம்! 1949-50ம் ஆண்டு முடிய ரிசர்வ் நிதி ரூ 7, 64, 424-13-4. உலகிலுள்ள எந்த கூட்டுறவு ஸ்தாபனமும் இந்த குறுகிய கால வளர்ச்சியில் இவ்வளவு வலிவுள்ள ரிசர்வ் நிதி பெற்றிருக்கவில்லை என்று துணிந்து கூறலாம்! தனிப்பட்ட பிரதம கூட்டுறவு நெசவு சங்கங்களில்—தலைமைப் பீடத்தில் எமிங்கனூர் ரிசர்வ் நிதியாக ரூ 3,75,482 பெற்றிருக்கிறது. ஸ்ரீ வில்லிபுத்தூர் கூட்டுறவு சங்கம் ரூ. 2, 22 825ரிசர்வ் நிதிபெற்று இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

இத்தோடு விலைச் சரிவை (ஏற்றத்தாழ்வு) சரிக்கட்டும் நிதியாக ரூ 28, 63,645 7-3 ஒரு இனம் காணப்படுகிறது! மத்திய நெசவாளர் கூட்டுறவு சங்கம் உள்ளிட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும், அதன் ஊழியர்களுக்கும் ரூ. 2, 41, 228-9-1 போனஸ் என்ற இனத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது!

கிராக்கியின்றி முடங்கிக்கிடக்கும்கைத்தறியின் அவநிலையினை ஜவுளி, நூல் கையிருப்பு என்ற இனம் தெளிவாக்குகிறது! நம் ராஜ்ய கூட்டுறவு சங்கங்களில் 1950ம் ஆண்டு ஜூன் மாதம் முடிய கையிருப்பு இனத்தில் (ஜவுளி, நூல்பட்டு, ஜரிகை முதலியன) ரூ 57,75,343-10-1. இத்தொகையின் பின்னால் மறைந்துகொண்டிருக்கிறது கஷ்டத்தின் கோர உருவம் உற்றுப் பார்த்தாலே தெரியும்! இதில் நூல் கையிருப்பு மட்டும் ரூ. 34,21,002-7-2. நம் சென்னை ராஜ்யத்திலுள்ள 927 கூட்டுறவு சங்கங்களில் 705 சங்கங்கள் நஷ்டமடைந்திருக் கின்றன என்று புள்ளி விவரம் கூறுகிறது!

[10-ம் பக்கம் பார்க்க]

உணவு, நூல்பங்கீடு ரத்துக்கு ஆட்சேபம்!

நிவாரணத்திட்டத்தை விஸ்தரிக்க வற்புறுத்தல்.

சத்திரப்பட்டி கை. நெ. தொ. சம்மேளன நிர்வாக குழுக்கூட்டம் 8–7–52தேதி திரு. சு. முத்துசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்கண்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின.

1. ஜூலை 5 முதல் அமுலாகிய நெசவாளர் நிவாரண திட்டத்தை இங்கும் உடனடியாக அமுலுக்கு கொண்டுவரவேண்டும்.

2. நூல் பங்கீடு திட்டத்தை சர்க்கார் தற்காலிகமாக ரத்துச் செய்ததை இக்கூட்டம் கண்டிக்கிறது. ஏனெனில், நூல்தாராளமாகஇன்று கிடைப்பதற்குஜவுளி தேக்கமும், நூல் விலைஏற்றமுமே காரணங்களாகும். நூல்விலையை 50%குறைத்துதேங்கியுள்ள, துணிகளுக்கு சர்க்கார் மான்யம் வழங்கினால் நெருக்கடி தீர உதவும். சர்க்காரின் ஊழல்நிறைந்த விநியோக முறைதான்நெசவாளர்களைபங்கீட்டு திட்டத்தில் வெறுப்படையும் படி செய்துவிட்டது. தேவை யான நூல்களை போதுமான அளவு எல்லாதறிகளுக்கும் சமமாகவிநியோகிக்கும் திட்டமே இன்று தேவை. சர்க்காரின் இத்திட்டமே நூல் விலை உயரவேவமலக்கமளிக்கும். எனவே இத்திட்டத்தை சர்க்கார்கைவிடவேண்டும்.

3. தானிய பங்கீட்டு முறை ரத்தானபின்பு இங்கு உணவு விலை உயாந்துவிட்டது. எனவே சர்க்காரின் இச்செய்கையையும் கண்டிப்பதுடன் நிவாரணகடைகளில் குறைந்த விலைக்கு தானியம் கிடைக்கச் செய்யவேண்டும்.

என்னபாடு படுத்தப்போறீங்க!

—:0:—

இன்னு மேன்ன செய்யப் போறீங்க—கைத்தறிக்காரர்களை
என்ன பாடு படுத்தப்போறீங்க—சொல்லுங்க நீங்க (இன்)
எதற்கு ஆட்சி செய்ய வந்தீங்க — மீண்டும்
இன்னுமேன்ன செய்யப் போறீங்க.

கொள்ளைபல அடித்துமாச்சு — கொல்லைப்புறமாய் நுழைந்துமாச்சு
சொன்ன சொல்லைத்தவற விட்டே—சொரணை கெட்டு நடக்கலாச்சு
ஓட்டுவேட்டை நடத்தியாச்சு — நாட்டுமக்களை ஏமாத்தி யாச்சு
விளையாட்டுமந்திரி அமைத்தாச்சு—களியாட்டங்களும் துவக்கியாச்சு
வேலை செய்ய நூலுக்காக — வெயிலில் நிற்க வைத்துமாச்சு
விடிந்த பொழுது மறைந்தும்கூட — வீணேபோக வைத்தாச்சு
ஏற்றுமதியை தடுத்துமாச்சு—துணியிறக்குமதியை பெருக்கியாச்சு
சோற்றுக்கின்றி தறிகாரன்—துன்பப்படவும் வைத்தாச்சு
அய்தராபாத்து யுத்தத்தாலே — நெய்வதற்கு நூலில்லையென
தெய்வத்தைக் குறை கூறி—தேசத்தாருக்குச் செப்பியாச்சு
சேலம் சிறை நடத்தியாச்சு — செயிலில் சுட்டுத்தள்ளியாச்சு
ஏழை நெசவாளிகளை — ஏளனமாய் நடத்தியாச்சு
வீட்டை விட்டு வெளியேற — நம் நாட்டு நெசவாளிகளை
ஓட்டாண்டியாக்கி யாச்சு — ரோட்டுப் போடக்கூப்பிட்டாச்சு
அரை வயிற்றுக் கஞ்சிக்காக — அறப்போரு நடத்தினோரை
முறை தவறிப் பேசியாச்சு — சிறையில் பிடித்துத் தள்ளியாச்சு
காங்கிரசு ஆட்சியாலே — கற்பு விலை கூறலாச்சு
கணவன்மாரைப் பிரிந்து—கைகுழந்தைகளை விற்றுமாச்சு (இன்)

—எம். கே. ஆறுமுகம்

அறிவிப்பு:

பத்திரிகைக்கு சந்தா செலுத்திமுடிந்துபோனவர்களுக்கு ஏற்கனவே தபால்மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களின் சந்தா தொகை ரூ. 3ஐ செலுத்தி புதுப்பித்துக்கொள்ள தவறினால் அடுத்த மாதஇதழ் நிச்சயமாக அனுப்பப்படமாட்டாது என்பதை அறிவிக்கப்படுகிறது.

நிர்வாகி.

குடியிருப்பு வசதி பெருக!

★

ஆர். எம். கண்ணபிரான்.

உணவுக்கும், உடைக்கும் அடுத்தபடி, மக்களின் அத்தியாவசிய தேவைப்பட்டியலில் முதல் இடம் பெறுவது வீட்டு வசதி. உணவுத் தேவை, உடைத் தேவை, வீட்டுத் தேவை ஆகியவைகளைப் பூர்த்தி செய்தபிறகே இன்றியமையாதது எனக்கருதப் படும் கல்வியும் சுகாதாரமும் இடம் பெறுகின்றன.

உணவுக்கும், உடைக்கும் இருக்கிற நெருக்கடியைப் போலவே வீட்டு நெருக்கடியும் இன்று கடுமையாக இருக்கிறது.

நிலப் பிரச்னையைப் போலவே வீட்டுப்பிரச்னையும் இன்று பயங்கரமாகக் காட்சியளிக்கிறது. இன்று இந்தியாவில் நாலரைக் கோடிப் பேர்களுக்கு மேல் குடியிருக்க ஒரு அறை கூட இல்லாமல் இருக்கிறார்கள் என்பதுமட்டுமில்லை; தலைக்கு மேல் ஒரு கூரைக்கும் கூட வழி இல்லாமல் திறந்த வெளியில் ஆகாயத்தையே கூரையாகக் கொண்டு வசித்து வருகிறார்கள்.

“வீடு அகப்பட்டது” என்று கூறிக்கொள்ளக் கூடிய நிலையிலிருப்பவர்களிலும்கூட 10 குடும்பங்களில் ஒரே அறையை வீடாகக் கொண்டிருப்பவர்களாகும். சுமார் 10அடி நீளம் 10 அடி அகலம் கொண்ட ஒரு இருட்டறையிலேயே நான்கைந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்று வசிக்கிறது. அதிலேயே சமைத்துக் கொள்ள வேண்டும். படுத்துக் கொள்ள வேண்டும், மற்றும்....

சென்னை, கோவை, மதுரை முதலிய தொழில் நகரங்களில் வீட்டுப் பிரச்னை படுமோசமாக, இருக்கிறது. சென்னை நகரத் தெருக்களில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்திற்குமேல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. 100க்கு95 தொழிலாளர் குடும்பங்கள் ஒற்றை அறை வீடுகளிலோ ஒரு வீட்டின் ஒவ்வொரு அறையும் ஒரு குடும்பமாக பல அறைகள் கொண்ட வீட்டில்பல குடும்பங்களாகவோ வசித்துவருகிறார்கள்.

இவ்வளவு நெருக்கமான குடியிருப்பு அசௌகரியங்கள் தான் மகாமோசமான சுகாதார சீரழிவுக்குக் காரணமாகிறது. இத்தகைய குடியிருப்பு நிலவரம் 23 பேருக்கு ஒரு கக்கூசு வீதமே இருக்கும்படி அனுமதிக்கிறது. காற்று வசதியோ, வெளிச்சமோ அற்ற அறைகளில் அடைப்பட்டுக் கிடந்து அதிலேயே உழன்று பிரசவம் உட்பட சகல சுகதுக்க சடங்குகளையும் அதிலேயே நடத்திக்கொள்ள வேண்டிய கண்றாவி நிலைமை இருப்பதால் காசம் போன்ற வியாதிகள் சுலபமாகப் பரவுகின்றன.

தொழில் நகரங்களில் தொழில்கள் விஸ்தரிக்க ஆரம்பித்தவுடன், ஜன நெருக்கமும் அதிகரிக்கத்தொடங்கியது. ஆனால், அதற்கேற்ப குடியிருப்பு வீடுகள் மட்டும் அதிகரிக்கவில்லை இந்த வீட்டு நெருக்கடிக்கு இது ஒரு பொதுவான காரணமாகும். நில உறவுகளில் மாறுதல் இன்றி கிராமப்புறங்கள் அபிவிருத்தி குன்றி விவசாயத் தொழிலும் கிராமப்புற கைத்தொழிலும் நசித்து அத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் கூட்டம் கூட்டமாக வேலை தேடி நகரங்களுக்குப் படையெடுத்தும் நகரப் புறங்களில் ஜனநெருக்கம் கடுமையாகக்காரணமாக இருந்து விட்டது.

நகரப்புறங்களில் ஜன நெருக்கடி வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு லாபமடையும் வரப்பிரசாதமாக இருந்தது. “கூட்டி மெழுகி விளக்கேற்றி வைக்கக் குடும்பம் ஒன்று குடியிருந்தால் போதும்” என்று வீட்டை வைத்துக் கொண்டு குடியிருக்க ஆள் தேடிக் கொண்டிருந்த வீட்டுக்காரர்கள், கை நிறைய வாடகை கேட்டு வாங்கியதோடு மட்டுமல்லாமல், ‘அட்வான்ஸ்’ என்ற பெயரில் ஒரு பெருந்தொகையை முன் கூட்டியே வாங்கிவிட முனைந்தனர். ஒரு ரூபாயுக்குக்கூட வாடகைக்கு குடியிருக்க ஆளில்லாமல் கிடந்த இடங்களுக்கு இன்று8 ரூபாய் 10 ரூபாய் எனவாடகை உயர்த்தப்பட்டது.

ஏழை மக்களுடையவும் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த குமாஸ்தாக்கள் முதலியவர்களுடையவும் வருமானத்தில் ஒரு நல்ல பகுதியை வீட்டுவாடகை விழுங்க ஆரம்பித்தது. அதிக வாடகைக்கு ஆசைப்பட்டு வீட்டுச் சொந்தக்காரர்கள் குடியிருப்பவர்களை நெருக்கினர். இயலாதவர்களை வீட்டைக் காலி செய்து விடும்படி வற்புறுத்தி நிர்ப்பந்தித்தனர்.

இந்த “வீடு இருப்போர் இல்லாதோர்” ஆகியஇருசாராருக்குமிடையே ஏற்பட்ட புதிய வர்க்கப் போராட்டத்தில் சக்தியற்றவர்களான குடியிருப்பவர்கள்கள் பல நகரங்களில் வாடகைப் பளுவைத் தாங்கமாட்டாது பல

நகரங்களில் வாடகைக்கு குடியிருப்பவர் சங்கம், குடி கூலி கொடுப்போர் சங்கம் என்றும் சங்கங்கள் ஆரம்பித்து வீடில்லாக்குறையை, வீட்டு வாடகை உயர்ந்து வருகின்ற நிலையை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி கிளர்ச்சி செய்தனர்,

சர்க்கார் வீட்டு கஷ்டத்தைத் தீர்க்க உடனடியாக புதிய வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் எதையும் போடவில்லை. ஆனால் "வாடகைக் கட்டுப்பாட்டு சட்டம் என்ற சட்டமொன்றை 1947ம் ஆண்டின் ஆரம்பத்திலே கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் இன்னும் அமுலிலிருந்து வருகின்றது. வாடகைக்குக் குடியிருப்பவர்களுடைய கஷ்டங்களுக்கு அந்தச் சட்டம் உண்மையான பரிகாரம் தந்தது என்று கூற முடியாது. ஓரளவு நல்ல நிலைமையிலிருந்தவர்களுக்கும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சிறிது சவுகரியமாக வீடு கிடைக்கச் செய்யத்தான் அந்தச் சட்டம் பயன் பட்டது.

சர்க்கார் ஏதாவது ஒரு பொருளுக்கு கண்ட்ரோல் கொண்டு வந்தால் உடனே அந்தப் பொருள் கள்ளமார்க்கெட்டுக்குச் சென்று மறைந்து விடுவது வழக்கம். அதைப்போலவே வீட்டுவாடகைக் கட்டுப்பாடு சட்டம் அமுலுக்கு வந்தவுடனேயே வீடுகள் விஷயத்திலும் ஒரு புதிய கள்ளமார்க்கெட் முறையும் புகுந்து கொண்டது.

வாடகைச் சீட்டில் ஒரு வாடகையைக் குறித்துக் கொள்வது. ஆனால் உண்மையில் வேறு அதிகமான தொகையை வாடகையாக வாங்குவது, அதற்கு அட்வான்ஸ் தொகை என்ற பெயரில் ரசீது பெற்றுக் கொள்வது. இப்படி சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்கள் ஏக போக ஆதிக்கத்தை அமுல் நடத்த ஆரம்பித்தனர். அதோடு இந்தச் சட்டம், வீடு வாடகைக்குப் பிடித்துக் கொடுக்கும் புரோக்கர்கள், என்னும் ஒரு புதிய வர்த்தகத்தையும் சிருஷ்டித்து விட்டது.

சட்டம் எப்படி இருந்தாலும் சாதாரண மக்கள் வசிக்கத்தக்க வீடுகளின் வாடகை வருஷா வருஷம் வளர்ந்து வருவது மட்டும் நிற்கவில்லை.

இரண்டாண்டுகளுக்கு முன்னால் அரசாங்கம், நாடெங்கும் உள்ள நிலைமையைக் கண்டு புதிய வீடுகள் கட்டுவதன் அவசியத்தை உணர்ந்து அதற்காக திட்டமிட்டது. அதில் ரயில்வே இலாகா எடுத்துக்கொண்ட நடவடிக்கை ஓரளவு வெற்றிகரமாக நடந்திருக்கிறது. வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்றால் ஏராளமாகப் புதிய வீடுகள் கட்டித்தரப்பட்டன என்பதல்ல அதற்கு அர்த்தம். அதிகப்படியாக

ஆரம்ப நந்நாளை எதிர்பாருங்கள்!

ஜெமினி பிரிண்டிங்

கைத்தறி & மில் துணி, சில்க் ஆகியவைகளை கண்கவர் வர்ணங்களில், அற்புதமான டிசைன்களில், குறைந்த சார்ஜில் சேலை & சீட்டி தினுசுகள் மெஷின் பிரிண்ட்செய்து தருகிறோம்.

: உரிமையாளர்கள் :

S. DORAISWAMY MUDALIAR & CO.,

CLOTH FINISHING PRODUCERS,

FORT, :: ERODE.

பொதுமக்கள் பணத்தை சர்க்கார் ஊதித்தள்ளி நஷ்டப்படுத்தவில்லை என்றுதான் அதன் மூலம் நாம் குறிப்பிட விரும்புவது. 1947ம் ஆண்டுக்கும் 1951ம் ஆண்டுக்குமிடையே கடந்த நான்கு வருஷகாலத்தில் ரயில்வே இலாகா 225000 வீடுகள் கட்டித்தந்திருக்கிறது. 1951-52ம் ஆண்டில் மட்டும் 11,225 வீடுகள், கட்டுவதற்கான வேலைகள் துவக்கப்பட்டன. தொடர்ந்து, நிதி நிலைமை அனுசாணையாக இருந்தால் 1 லட்சத்து 50000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதைத் தவிர மத்தியசர்க்கார் வீட்டுப்பிரச்னையை சமாளிக்கக் கையாண்ட மற்ருெரு திட்டம் ஏராளமாக "ரெடிமேடு' வீடுகளைக் கொண்டுவந்து குவிப்பது என்பதாகும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் புசுபுசுத்ததும், அதில் ஏற்பட்ட ஏராளமான ஊழல்களும், பொதுமக்களுடைய வரிப்பணம் இந்தப்படாவதி திட்டத்தில் பாழ்பட்டதும் மக்கள் நன்கறிந்ததே.

சென்னை ராஜ்யத்தைப்பொறுத்த அளவில், இந்தவீட்டுப்பிரச்னையைதீர்க்கசர்க்கார் நேரடியாக கூட்டுறவு முறையை மேற்கொண்டது. அதன்படி நம் ராஜ்யத்தில் இதுவரை 923 வீடுகட்டும் கூட்டுறவுசங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கைதான் இவ்வளவே ஒழிய, இச்சங்கங்களால் உருப்படியாக சாதிக்கப்பட்டதோ மிகமிக சொற்பம்தான். கூட்டுறவு சங்கங்களால் இதுவரை (சுமார் இரண்டாண்டுகாலத்தில்) கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1250 தான் என்று தெரிகிறது. இதற்கு காரணம் பல சங்கங்கள் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதோடு தூங்குகின்றன என்றும் கூறப்படுகிறது அப்படிக் கட்டப்பட்ட வீடுகளும் மாதம் 10, 15, ரூபாய்கள் உபரியாக சம்பாதிக்க முடிந்தவர்களுக்கே கிடைத்திருக்கிறது என கூட்டுறவு ரிஜிஸ்திரார் ரயானின் பேச்சிலிருந்து நம்மால் அறியமுடிகிறது.

இந்த கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்திற்கு 1952-53ம் ஆண்டு பட்ஜட்டில் சென்னை சர்க்கார் 15 லட்சம் ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறது. யானைப் பசிக்கு சோளப்பொறி போல.

ஒரு கவர்னருக்கு மட்டும் அலவன்ஸ், சம்பளம் என்கின்ற பெயரில் 7 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிய சர்க்கார், போலீஸ் படைக்காக 7 கோடி ரூபாய் ஒதுக்குகிற சர்க்கார் மக்களுக்கு வீடு கட்டித்தருவதற்காக ஒதுக்கியுள்ளதோ 15லட்சம்!

அது ஒருபுறமிருக்க, கூட்டுறவு முறைப்படி கட்டப்படும் வீடுகளின் நிலைமை என்ன என்பதைச்சிறிது பார்ப்போம்.

கூட்டுறவு திட்டப்படி, வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் நான்கு ரக வீடுகள் கட்டும் வேலையை மேற் கொள்கின்றன. முதல் ரக வீடுகள் அதாவது ஏ. டைப் ரூ 10 ஆயிரமும் பி. டைப் வீடுகள் 8 ஆயிரமும், சி. டைப் வீடுகள் 6 ஆயிரமும், டி. டைப் வீடுகள் ரூ. 3 ஆயிரமும் மதிப்புள்ளவை. இந்த மதிப்பில் வீடு கட்டும் மனையின் விலையும் அடங்கியிருக்கிறது. திட்டமென்னமோ நான்கு டைப் ஆக இருந்தாலும் நடை முறையில் சென்னை ராஜ்யத்தின் எந்தப் பகுதியிலும் இந்த வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் டி. டைப் வீடுகளைக் கட்டும் வேலையையோ திட்டத்தையோ மேற்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதாவது தங்கும் சாதாரண மக்களுக்கான வீடுகள் கட்டப்பட முயற்சி எடுக்கப்படவில்லை.

கூட்டுறவு திட்டப்படி மேற்கண்ட வீடுகள் தேவையானவர்கள் ஒரு சங்கத்திடம் அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். வீடுகள் கட்ட ஆரம்பிப்பதற்குமுன்னாலேயே மதிப்பின் நாலிலொரு பகுதித் தொகையைச் செலுத்திவிட வேண்டும். எனவே இந்தத்திட்டப்படி கட்டப்படுகின்ற வீடுகள் கூட மத்திய தரப்பகுதி மக்களில் உயர்ந்த நிலையிலிருப்பவர்களும், ஓரளவு வசதிக்காரர்களுக்கும் ஏற்றதாக வீடு கட்டித்தரும் திட்டமாக இருக்கிறதே யொழிய, சாதாரண மத்தியதரப் பகுதி மக்களுக்கும், இதர ஏழைகளுக்கும் எவ்விதத்திலும் பயன்தாத்தக்கதாக இல்லை.

இந்திய சர்க்காரின் திட்டக் கமிஷன் வருஷம் ஒன்றுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டுவது என்று திட்டம் சமர்ப்பித்திருந்தது. ஆனால் சர்க்கார் நிதி நிலைமையை உத்தேசித்து அதை நாலிலொரு பகுதியாகக் குறைத்து விட்டனர். அதாவது ஆண்டொன்றுக்கு 25 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டுவதென சர்க்காரின் முடிவு. இம்முறையில் வீடுகள் கட்டப்படுமானல் தேச மக்களின் தேவை பூராவையும் பூர்த்தி செய்வதற்கு 80 வருஷங்கள் ஆகும் என்று ஒரு பார்லி

மெண்ட் அங்கத்தினர் பார்லிமெண்டில் கூறினர்.

ஆக மொத்தத்தில் மத்திய சர்க்காரும் சரி, மாகாண சர்க்காரும் சரி திட்டவட்டமாகவும் விரைவாகவும் மக்களுடைய வீட்டுப்பிரச்னையைச் சரியான முறையில் தீர்த்துவைக்க முனையவில்லை. சர்க்கார் இந்தப் போக்கை உடனடியாக மாற்றிக் கொள்ளாவிட்டால் அது மிகுந்த சிக்கல்களில் கொண்டு போய் விடும், நாளுக்கு நாள் கடுமையடைந்து வருகிற இந்த வீட்டுக் கஷ்டம் பிரும்மாண்டமானதாக வளரும் முன்பே ஒரு தக்க முறையைக் கையாண்டு இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க சென்னை சர்க்கார் கையாளும் கூட்டுறவு முறைசாலச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. ஆனல் அதில் சிறிது ஊக்கமும் சுறு சுறுப்பும் அதிகப்படியாக்க வேண்டும்.

யுத்த காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இங்கு ஓடி வந்த அகதிகளுக்கு குடியிருப்பு வசதி செய்து தர வேண்டிய பொறுப்பு அன்றிருந்த அரசாங்கத்திற்கு இருந்தது. கோவை காட்டிலாகாக் கல்லூரியைச் சுற்றி எத்தனையோ வேகத்தில் குடியிருப்பு வீடுகள் மிகக் குறைந்த செலவில் பிரிட்டிஷ் சர்க்காரால் அவ்வகதிகளுக்கு கட்டிதரப்பட்டன. யுத்தம் முடிந்து அந்த வீடுகளில் குடியிருந்த அகதிகள் ஐரோப்பா சென்றபிறகு, அந்த வீடுகளைத் தங்களுக்குத தரும்படி கோவை சர்க்கார் ஊழியர்கள் சர்க்காரிடம் பலமுறை கேட்டனர். இரண்டு மூன்று ஆண்டுகள் யோசிக்கிறோம் யோசிக்கிறோம் என்று கூறி வந்த சர்க்கார், கடைசியில் அந்த வீடுகளை இடித்து அதில் இருந்த கல், காரை, மரம் முதலியவைகளை எடுத்துக் கொள்வதற்காக யாரோ ஒருவருக்கு விற்றுவிட்டது.

ஆக, உற்சாகத்துடன் சர்க்கார் முனைந்தால் விரைவாகவும் எளிதாகவும் குடியிருப்பு வசதிகள் செய்துதர முடியும். கூட்டுறவு சங்கங்களுக்கு மானிய உதவியோ கடனுதவியோ அளிப்பதோடு நின்றுவிடாமல் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான உபகரணங்கள் கிடைக்கச் செய்யவும் சர்க்கார் உதவ வேண்டும். சர்க்காருக்குச் சொந்தமான காலியிடங்களையும் மனைகளையும் கூட்டுறவு சங்கத்திற்கு சுலபமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன் அச்சங்கங்கள் வேலையில் துரிதமாக ஈடுபட சர்க்கார் தூண்டவும் வேண்டும். இவ் வீட்டுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சர்க்கார் மட்டுமின்றி ஸ்தல ஸ்தாபனங்களும் பொறுப்பேற்கவேண்டும் சர்க்கார், ஸ்தலஸ்தாபனங்கள், கூட்டுறவு சங்கங்கள் ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் ஒத்துழைத்தே இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் தேட வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் மேற்கொண்டிருக்கும் வீடுகள் கட்டும் திட்டத்தில் சாதாரண ஏழை மக்களுக்கு இடமே இல்லாமல் இருக்கிறது.

கோவை கூட்டுறவு சங்கமொன்று சாதாரண மத்தியதர மக்களின் சவுகரியத்திற்காக வீடு கட்ட ஆரம்பித்து 40 ரூபாய் 50 ரூபாய் வாடகைகொடுக்கக்கூடிய அளவு பெரிய வீடுகளைக் கட்டுவதில் போய் முடிந்திருக்கிறது. இது போன்ற குருட்டுத்தனமான திட்டங்கள் போடுவது கைவிடப்படவேண்டும்.

2000 ரூபாய் மதிப்புக்கு மேற்படாமல் உள்ள வீடுகளாகக் கட்டுவதையே ஆரம்பக் கட்டத்தில் கூட்டுறவு சொஸைட்டிகள் மேற்கொள்ள வேண்டும். 20 ஆண்டுகளில் சாதாரணமாக வாடகை வசூலிப்பதைப்போல 10, 15 ரூபாய்க்கு மேற்படாமல் பணம் கட்டி வீட்டு மதிப்பை அடைக்கத் தக்கவாறு கூட்டுறவுத்திட்டம் இருக்க வேண்டும்.

[23-ம் பக்கம் பார்க்க]

[சென்றஇதழ் தொடர்ச்சி.]

பிச்சைக்காரி மீனா

[ச. குணவரசு.]

கையில் காயமேற்பட்டிருந்த இடத்தை மீனாள் பதட்டத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள் 'காயம்பலமோ? எனக் கேட்டான் வாலிபன்.

"காய மில்லை; கொஞ்சம்கன்னல்தான் ஏற்பட்டு விட்டது."

"நல்ல வேளை"

கையைப்பார்த்துக்கொண்டிருந்தவள்; 'உங்களுக்குக் கோடி புண்யமுங்க" எனக் கூறி நிமிர்ந்து பார்த்தாள்; திடுக்கிட்டுப்போனாள்; அவ்வாலிபனை அங்கு காணவில்லை. திரும்பிப் பார்த்தாள், கொஞ்ச தூரத்தில் அவன் நடந்து போய்க்கொண்டிருந்தான்.

"நல்ல ஆளையா நீர்; உடனே நகர்ந்து விட்டீரே எனக்கு உதவி செய்தீர் அதற்கு நான் நன்றி சொல்லுமுன் நகர்ந்து விட்டீரே நான் என்ன நன்றி கெட்டவள் என்று நினைத்தீர்" என்றாள் வழி மறித்து. அழுக்கேறியிருந்த அவன் உருவமும், அறிஞர்களைப்போல் ஆராய்ச்சி நோக்குடைய அவன் கண்களும் மீனாவின் உள்ளத்திற் பதிந்தன. எத்தனையோ விதமான ஆடவர்களையெல்லாம் கண்டிருக்கிறாள். ஆனால், இது வரை இப்பிச்சைக்காரி மீனாளின் இதயத்திலே குடியேறியவர் யாரும் கிடையாது. எண்ணெய் இல்லாச் செம்பட்டத்தலை, எதையோ நினைத்து வாடியிருக்கும் முகம், தூய்மையில்லா அழுக்கு உடை, தொலைவிலுள்ளதைப் பார்ப்பதுபோல் ஆழ்ந்து நோக்கும் கண்கள்.... இத்தகைய தோற்றமுள்ள அவ்வேழை இளைஞனின் உருவந்தான்; மீனாளின் இதயத்திற் புகுந்தது. அவள் சிறுசினமும் சிறு நகையும் தோன்றக் கேட்டாள்: முகத்தில் குறும்பும் கண்ணில் குளிர்மையும் அகத்தில் அன்பும் மிகுந்து நின்றாள்.

ஆனால், அவ்வாலிபன் அவ்வளவையும் அலட்சியப்படுத்தி விட்டு 'நீ யாரம்மா எனக்கு நன்றி கூற; நான் யாருக்கு உதவி செய்தேன்? நான் ஒரு ஆனாதை........' எனக் கூறி மறுபடியும் நடந்தான். அவனது செக்கச் சிவந்த கண்ணோரத்தில் நீர்த்துளிகள் நீந்திக் கொண்டிருந்தன.

மீனாளுக்கு அவன் வார்த்தைகள் அன்பையும், இரக்கத்தையும், அதனால் ஏற்படும் கனிவையும் அதிகப்படுத்தின. "நானும் உம்மைப் போலொரு அனாதை தான்; வீட்டுக்கு வாரும் சாப்பிடுவோம்" என்றாள். அவனுடைய பசி இதற்குப் பணிந்து விட்டது. பரிதாபத்தோடு அவளை நோக்கிப் பெருமூச்சு விட்டுப் பின் தொடர்ந்தான்.

குடிசைக்குள் வரவும் முதலில், சில மருந்து வகைகளைக் கொண்டு வந்து அம்மியில் வைத்து அரைக்கப்போனாள். வாலிபன், "வேண்டாம்; உன் கைகள் வேதனைப்படும்; நானே அரைக்கிறேன்" எனக் கூறிக் கொண்டு, மருந்தை அரைத்து கன்னல் பட்ட கன்னியின் கையிலே கட்டினான். அவன் கை பட்டதும் ஏற்பட்ட ஸ்பரிச உணர்வு, புண்ணின் வேதனையைக்கூட மறைத்து விட்டது!

ஒரு மண் கலயத்தில் கொண்டு வந்து வைத்தாள் கஞ்சியை. அவன் ஆவலோடு பருகினான். மீனாள் ஆனந்தத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள். தானே உழைத்துப் பொருளீட்டி, அதைக்கொண்டு விருந்தினரை உபசரித்து அதிலேற்படும் இன்பத்தைக் கண்டு மகிழும் பேறு அன்றுதான் மீனாவுக்கு கிடைத்தது.

ஓட்டமும் நடையுமாக உபசரணைகளைச் செய்தாள். கயிற்றுக் கட்டிலில் உட்காரச் சொன்னாள். இப்பொழுதுதான் அவன் முகம் சற்று சந்தோஷமாயிருந்தது. ஆயினும், வருத்தக் குறிகள் தோன்றாமலில்லை. "எனக்கு இவ்வளவு துணை புரிகிறாயே நீ யாரம்மா?..........உனது பெற்றோர்கள்.......ஏதாவது............" என்றான் அன்பான குரலில்.

"என் பெயர் மீனாட்சி, நான் அனாதைதான். பெற்றோரும் உற்றாரும்எனக்கு இல்லை. நான்நெசவாளர் இனத்தில் பிறந்ததாக நினைவிருக்கிறது; தொழிலில்லாமல் பஞ்சம் பிழைக்க வந்து இந்த வேலை செய்கிறேன்........ ஆமாம் நீர் யார்? என்று அவனைப் பார்த்துக் கேட்டாள் மீனாள். அவன் முகத்தில் கார்காலக் குளிர்ச்சி இருந்தது.

"நான் ஒரு பஞ்சை; ஆனால் பெயர் பாக்கியநாதன். என்னைக் காட்டிலும் ஏழை உலகிலேயே எவனும் இருக்க முடியாது. நானும் உனது சமுதாயந்தான்; இப்பொழுது பட்டினி கிடப்பவன்; அதனால் இறப்பவன். கைத்தறி நெசவாளர் சமுதாயத்தில் பிறந்தவர்கட்கு வேறு வழி?....' ஏக்கமும் பெருமூச்சும் கலந்தது அவ்வளவுதான். அதற்குள்

வார்த்தைகள் தொண்டையை வந்து அடைத்துவிட்டன.'' சரி நான் வருகிறேன்'' என்று எழுந்தான் பாக்கியநாதன்.

"போகவேண்டாம்; நீ இங்கேயே இருக்கலாம். ஏதாவது வேலை செய்; கூலி கிடைக்கும்! நான் கஞ்சி காய்ச்சித் தருகிறேன். உனக்கு எப்பொழுது சம்மதமும் சந்தோஷமும் இருக்குமோ அப்பொழுது நீ ஊருக்கு போகலாம்....இருவருமே வேலை செய்வோம்.'' என்றாள். மீனாவின் மொழியிலே அன்பு, பணிவு, ஆதரவு, தைரியம் அத்தனையுமிருந்தன. பாக்கிய நாதனுக்கு அது நல்ல பாதுகாப்பாகத் தெரிந்தது சம்மதித்தான்.

காலையில் கொஞ்சம் களிப்பு

பாக்கியநாதன் கூலி வேலைக்குச் செல்வான்; மீனாள் பழைய வேலைக்குச் செல்வாள். தனக்குக் கிடைத்த கூலிக்காசையெல்லாம் அவளிடமே கொடுத்து விடுவான். கரும்பின் சாறுபோல் இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டே கஞ்சி காய்ச்சி ஊற்றுவாள் மீனாள். நாதன் உள்ளத்திலிருக்கும் கவலையில் கூட கொஞ்சம் களிப்புப் பிறந்தது. மீனாள் நல்ல ஆறுதலைக் கொடுத்தாள். அவள் பிச்சைக்காரியாக இருந்தாலுங்கூட, நயமாக நடப்பாள்; நடிப்பாகப் பேசுவாள். தங்கள் வருவாயில் கொஞ்சம் மீதமும் வைத்திருந்தாள்.

சிலமாதங்கள்சென்றன, மீனாள் நாதனை, நாதனுக்கிக்கொள்ள முடிவு செய்துவிட்டாள். நாதன் நட்பாக மட்டும் இருக்க வேண்டுமென்று நினைக்கிறான்; அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. ஆனால் மீனாவுக்கு இது தெரியாது. அவள் உண்மையாகவே நாதனும் தன்னைக் காதலிக்கிறான் என்றே நினைத்திருந்தாள். அடிக்கடி கனவில் கண்டதை நினைத்து மகிழ்வாள். சில சமயம் நாதனின் கன்னத்தைத் தட்டுவாள்; பின் கவனியாதுபோல் இருப்பாள்; எதைப்பேசினாலும் தட்டிக் கொடுத்து தோளைத் தடவிக் கொண்டு பேசுவாள்; கிட்ட நிற்பாள்; பின் ஒட்டி நின்று விட்டு ஓடிப்போவாள். இப்படியாக மீனாள் இதயத்திற் காதலன் போடு பழகினாள். ஆனால், பாக்கியநாதனின் பதில் இவைகளுக்கெல்லாம் ஒவ்வொரு புன் சிரிப்புத்தான்; அதுவும் சில சமயம் பூத்தவுடனேயே மறைந்து விடும். நாதனுக்கு மீனாளின் மேல் அளவற்ற அன்பு இருந்தது, ஆனால் ஆசை இருக்கவில்லை. கருத்திற் கனிவு கொண்டான். ஆனால் காதல் கொள்ளவில்லை,

திருமணத்தில்

அன்று இரவு சுமார் எட்டு ஒன்பது மணி இருக்கும். கலையறிவு மிக்க கைத்தறி நெசவாளி, கருப்புத் துணியிலே பொன்னிழைத்த நூல் கொண்டு 'பூ; போட்ட சேலை நெய்து விரித்து வைத்ததுபோல் வானம் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. வெண்முகிற் சிதறல்களினிடையே மேற்கிற் பிறைமதி மறைந்து கொண்டிருந்தான்.

மறுநாள்; காலையில், தங்கள் இருவரையும் பிணைத்து வைக்கும் திருமணகாரியத்தைப்பற்றி நாதனின் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே—கொஞ்சிக் கொண்டே கூறினாள். அவன் புன்னகை அதற்குச் சம்மதித்ததாக மீனாளுக்குத் தெரிந்தது. ஏதோ கலியாணத்திற்கு வேண்டிய சாமான்களெல்லாம் வாங்கி வைத்திருந்தாள். கொட்டு முழக்கமும், ஓதும் குருமாரின் வேதமும் பட்டுப்புடவைகளும் பந்துஜனங்களும் அவள் கலியாணத்திற்குக் கிடையாது. இரண்டு மாம்பழங்கள், இரண்டு மல்லிகைப்பூச் சாரம், கொஞ்சம் உதிரிப்பூ, ஆளுக்கொரு கைத்தறி ஆடை, இவைகள் தான் மீனாள், தன் திருமணத்திற்குத் தயார் செய்து வைத்திருந்தது.

நடக்க இருக்கும் மணம் குறித்து நங்கையின் மனம் மகிழ்வில் தன்னை மறந்திருந்தது. மகிழ்ச்சி, ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோர் மனதிலும் உதிக்கும், ஈகை, அன்பு, பெருந்தன்மை, தியாகம் ஆகிய குணங்களைக் கொண்ட பெண்மையைப்பற்றி நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தாள் மீனாள். கருமை சூழ்ந்த இரவிலே கண்சிமிட்டும் விண்மீனின் கவர்ச்சியைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், அப் பெண்மீன். ஒளி விடும் உடுக்கள், உழவனுக்கு உவகைதரும் கார்க்கூட்டம், வெளி விட்டு நிலம் கிழிக்கும் ஆறுகளின் நீரோட்டம், அவை உதிக்கும் நெடுமலைகள், அம்மலையை யடுத்த நீள் வயல்கள், வயலையடுத்த சிறுசிறு குடிசைகளைக்கொண்ட சிற்றூர். ஆங்குள்ளஉயர் தோளுடைய உழைப்பாளர் குவித்த நெற்குவிகள், அதை மூட்டையாகக் கட்டி அடுக்கி வைத்திருக்கும் மாளிகைகளை கொண்ட பேரூர், அப்படிப் பல ஊர்களையுங் கடந்து அலைவீசுங்கடல், அதன் ஆழத்திலே ஒளி வீசும் ஆணி முத்துக்கள் அண்மையிலே மித

உத்திரவாதமான கெட்டிச்சாயம்
தோய்ப்பவர்கள்
மதராஸ் கைத்தறி
நெசவாளர் மாகாண
கூட்டுறவு சங்கத்தாரால்
அங்கீகாரம் பெற்றவர்கள்
வரதராஜ் & கோ
சாயத்தொழிற்சாலை
மீன்கரைரோடு, பொள்ளாச்சி.

க்கும் வாணிபக்கப்பல்கள்........ இத்தகைய செல்வங்களையெல்லாம் கொண்ட இயற்கையைப் பெண் என்றுதானே அறிஞர்கள் கூறுகிறார்கள் என்றும் நினைத்துப் பெருமைப் பட்டாள் போலும்.

நாதன் வந்தான். மேகத் திரைக்குள் மின்னிடும் விண்மீனை, மோகத்திரைக்குள்ளிருக்கும் மீனாளின் முகம் நோக்கி இருந்தன. அன்றுதான் அவள் அழகை நாதன் கண் நிறையக் கண்டிருக்கிறான். அவள் அணிந்திருந்த மேகலை, அவனுக்கு போதையூட்டின; தன்னை மறந்தான். தன் விரல்களால் மீனாளின் தோளை வருடிக்கொடுத்தான் நாதன். அவள், உணர்வு பெற்றுத் திரும்பிப் பார்த்தாள் நாதனின் முகத்தில் காதல் போதை நடமாடி நிற்பதை. மீனாளின் கரங்கள் நாதனின் முகத்திலும் தோளிலும் நடனமாடின. மலைமீது படிந்துவரும் நதிபோல் அவன் மார்மீது படிந்திருந்தாள், மீனாள்.

ஆ! எவ்வளவு பயங்கரமான மாறுதல்! கொல்லன் உலை போல் நாதன் பெருமூச்சு விட்டான். மலர்ந்திருந்த அவன் முகம் மருண்டது; கண்கள் சிவப்பேறின; அதிலிருந்து நீர் சரஞ்சரமாக வடிந்து மீனாளின் முகத்தையும் நனைத்துச் சென்றன "மீனாள்! என்னை மன்னித்து விடு; நான் இப்போதே ஊர் போய்ச் சேரவேண்டும்!' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறினான், நாதன்.

மீனாளின் முகத்தில், ஆச்சரியம், ஏமாற்றம், இரக்கம், கேள்வி எல்லாம் மாறி மாறிப் பிறந்தன. அவள் அவனைப் பதட்டத்தோடும் பரிதாபத்தோடும் பார்த்தாள். மீனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை!

"மீனா; இதுவரைக்கும் என்னைக் காப்பாற்றியதற்கு உனக்கு நன்றி. இதுவரை சொல்லாத எனது வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்கிறேன், நிதானமாக தைரியமாகக் கேள்." எனக்கூறி அவன் கூறத்தொடங்கினான்.

"நேபுகாட் நேசரின் பாபிலோன் ராஜ்ஜியத்திலே, தமிழகத்தில் நெய்த துணிகள் விற்பனை செய்ததாக, வரலாற்றறிஞர்கள் நினைக்கிறார்கள். அலெக்ஸான்ட்ரியாத் துறைமுகத்தில் உலவும் வாணிபக் கலங்களிலிருந்து இறக்கிய பட்டாடைகள், அலெக்ஸான்ட்ரின் அரண்மனையில் ஒளி வீசி ஆங்குத்தமிழரின் புகழை நிலை நாட்டின. ரோம் சாம்ராஜ்ஜியத்தில் உலவிடும் வீரரின் வேலொளிக்கு நிகரத் தமிழரின் பொன்னுடை, ஒளிவீசிப் புகழ் பரப்பின. அத்தகைய பண்டைய வரலாற்றுப் புகழைத் தமிழ் நாட்டிற்குத் தந்தவர்களான நெசவாளர் வம்மிசத்தில் பிறந்தவன் நான். இன்று, தரித்திரந்தான் அவர்களின் சொத்து; பட்டினிச் சாவுதான் நெசவாளருக்குச் சொர்க்கம்; பிச்சை யெடுப்பதுதான், தொழில்! அந்த நிலைக்கு வந்து விட்டோம்! எனக்கு மனைவியும் ஒரு மகனும் உண்டு. விடிந்தால் என்னைக் கடன்காரன் கைதியாக்கிக் கொண்டு போய் விடுவான். அதற்குப் பயந்து அன்றிரவிலேயே ஓடி வந்தேன்; நீ அபயமளித்தாய்; அடைக்கலம் என்றிருந்தேன்; ஆதரித்துக் காப்பாற்றினாய்; அதற்கு என் நன்றி. நான் போக வேண்டும். அவர்கள் என்ன பாடுபடுவார்களோ; மீனாள், நான் உன்மீது அன்பு கொண்டேனே யொழிய ஆசை கொள்ள வில்லை. உன்னிடம் சரஸமாடியதற்காக, என்னை மன்னித்து விடு; நான் வருகிறேன்' எனக் கூறி நடந்தான்.

மீனாளின் கண்களில், இரக்கமிருந்தது; அதோடு நீரும் சுரந்து கொண்டிருந்தன! 'நில்லு' எனக் கூறிவிட்டு, இருவருமாக சேர்த்து வைத்திருந்த ஐம்பது ரூபாயை அவனிடம் கொடுத்து, வழிச்செலவுக்கு வைத்துக்கொள் என்று கூறினாள். நன்றி கலந்த முகத்துடன் வாங்கிக் கொண்டான், நாதன், வடிந்திருந்த கண்ணீர் மீனாளின் கன்னத்தில் உறைந்து வறண்டு போயிருந்தது.

மூன்று பிணங்கள்!

பாக்கியநாதன், வேகமாக நடந்து ஊரையடைந்து போய்ப் பார்த்தான். அவனுடைய வீடு அங்கில்லை; அவனுக்கு அடையாளமே தெரிய வில்லை; மனைவி மக்களையும் காணவில்லை தன் கால்கள் ஓய மட்டும் தேடினான்.

அன்று ஒரூரில் வந்து பகல் முழுதும் தேடினான் காணவில்லை அவன் கால்கள் ஓய்ந்து விட்டன; உடல் சோர்ந்து விட்டது; ஆனால் மனம் மட்டும் சலிக்க வில்லை. ஊரின் புறத்தேயுள்ள ஒரு மரத்தடியில் அன்றைய இரவைக் கழிப்போம் என்று உட்கார்ந்தான்.

மேகம், நட்சத்திரக் கூட்டத்தையும் மறைத்து எங்கும் ஒரே கும்மிருட்டு கூடி இருந்தது. நெசவாளர் நிலை இத்தகைய பஞ்சை நிலைக்கு வந்துவிட்டதே என எண்ணியெண்ணி உள்ளம் வருந்திக் கண்களில் கண்ணீர்

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு - ஈரோடு.

வடிந்து கொண்டிருந்தது. ஊர் முழுதும் அடங்கியிருக்கும் நிசப்தமான அந்த நடுநிசியில், அவன் கண்கள் மட்டும் உறங்காமல் விழித்துக்கொண்டிருந்தன! அக்கண்களின் எதிரில் நெசவாளர்களது துன்பங்கள் அத்தனையுந்தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன!

உடலுக்குக் கொஞ்சம் ஆபாசமாக இருக்கிறதென்று தன் மேல் துண்டை எடுத்துக் கீழே விரித்துக் கொஞ்சம் சாய்ந்தான்; சங்கடமாக இருக்கிறதென்று மறு பக்கம் சாய்ந்து படுத்தான். அவன் காலடியில் ஏதோ தட்டுப்பட்டது போலத் தெரிந்தது. லேசாக அமுக்கிப் பார்த்தான்; ஓர் மனித உருவின் ஸ்பரிசம் அவனுக்குப் பட்டது. எழுந்து கூர்ந்து பார்த்தான்; ஆ! என்ன பயங்கரமானநிலை! நாதனுடைய மனைவி கிடந்தாள். மடிமீது வைத்துத் தூக்கிப்பார்த்தான்! அடடா! என்ன பரிதாபம்? என்ன கோர நிலை! அவள் பிணமாகியிருந்தாள்! பட்டினிச்சாவு என்ற கோரப்பிசாசு, தன் பட்டினியைத் தீர்க்க நாதனின் மனைவியை புசித்து விட்டிருந்தது! அவள் மைந்தனும் பக்கத்தில் கிடந்தான் பிணமாக! இரு பிணங்களையும் எடுத்து மாரி மாரி அணைத்தான்; அழுதான்; ஆத்திரப் பட்டான்! ஆனால் என்ன பயன்? நெசவாளா அனைவருக்கும் அந் நிலைதானே!

பாக்கிய நாதனின் உள்ளம் மேலும் மேலும் புலம்பிக்கொண்டிருக்கும்வேதனையை மறந்தது; விடுதலை பெற்றது! மரத்தின் மேலேயுள்ள கிளையொன்றில் தன் மேல்த் துண்டைக் கட்டினான்; தானும் தொங்கினான்! அவன் கண்கள் இருளும் போது அவன் உள்ளத்தில், இந்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் அத்தனை பேருடைய கழுத்திலும், பஞ்சம் என்ற தூக்குக் கயிறு மாட்டப்பட்டு நெசவாளரின் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கும் காட்சிதான் தோன்றியது. ஐம்பதுரூபாய்நோட்டுகளும் மூன்று அனாதைப் பிணங்களும் என்ற விஷயம் மறுநாள் பத்திரிக்கைகளிலே வெளிவந்தன! இதைக் கேள்விப்பட்டதும் மீனாள் சித்தப்பிரமை பிடித்து நின்றாள். அவள் கண்களில் வடிந்த கண்ணீர் மலைமீதிருந்து கீழே விழும் நீர் வீழ்ச்சி போல அவள் கன்னத்தில் வடிந்து தரையிற் சிந்திச் சிதறின.

நாட்டில் கைத்தறி நெசவாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள் — பசியால் துடிக்கிறார்கள்; செத்துப் பிணமாகிறார்கள் என்பதற்காக வருந்திக் கண்ணீர் சிந்தக்கூடியவர்கள், பிச்சைக்காரி மீனாள் ஒருவள் தவிர வேறு எவருமில்லை என்று கூறும்படியாக அன்றைய இரவு மீனாளுக்குச் சூன்யமடைந்து காட்சியளித்தது. (முற்றும்..)

[19-ம் பக்கத்தொடர்ச்சி]

இப்போது கூட்டுறவு சங்கங்கள் கட்டிக்கொடுக்கிற வீடுகள் தமிழ் நாட்டு நாகரீகத்திற்கு ஏற்றதாகவோ மழை காற்று முதலிய சீதோஷ்ண தாக்குதலைச் சமாளிக்கக் கூடியதாகவோ இல்லை என்பது பெருங்குறை. கூட்டுறவு சொஸைட்டிகள், ஏ. ஸி. ஸி. ஸிமெண்ட் கம்பெனியார் போட்டு வைத்திருக்கும் பிளான்படி இந்த வீடுகளைக் கட்டுகிறார்களாம். அந்தப் பிளான் பம்பாய்க்கோ, கல்கத்தாவுக்கோ பொருத்தமாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டுக்குப் பொருத்தமாக இல்லை. எனவே கூட்டுறவு சங்கங்கள் இந்தக் குறையைத் தவிர்க்க வேண்டும் தமிழ் நாட்டின் பண்புக்கும், சீதோஷ்ண நிலைக்குஏற்ப வீடுகள் கட்ட வேண்டும். ●

26—4—52ல் சத்திரப்பட்டியில் நடைபெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா கைநெசவுத் தொழிலாளர் சம்மேளன முதலாவது மகாநாட்டின் வரவு செலவு கணக்கு

வரவு.

சத்திரப்பட்டி ஏரியா	294	3	0
இராஜபாளையம் ,, & மில்கள்	160	2	0
சேத்தூர் ஏரியா	94	8	0
இராமச்சந்திரபுரம் ,,	75	12	0
அருப்புக்கோட்டை	68	10	0
மதுரை, சங்கர நயினார் கோவில்	7	4	0
ஸ்ரீ வில்லிபுத்தூர்	17	8	0
கிழக்கு பட்டிகள்	9	12	0
உண்டியல் வசூல்	15	2	7
மொத்த வரவு	742	13	7
மொத்த செலவு	707	2	0
மீதி ரூ.	35	11	7

செலவு.

தபால் செலவு	19	5	0
கொட்டகை	224	0	0
விளம்பரம்	113	6	3
ஸ்டேஷனரி	6	10	0
தலைவர்களுக்கு பணம் அனுப்பியது	66	14	0
சாப்பாடு	3	12	0
போக்குவரத்து	132	7	6
மைக், லைட், இதர செலவுகள்	106	9	3
மகாநாடு முடிந்ததும் K. S. பார்த்தசாரதி கூட்டச் செலவு	34	2	0
ஆக ரூ.	707	2	0

மீதி ரூபாய் 35–11–7ஐயும் தாலூக்கா சம்மேளன கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

செயலாளர், மாநாட்டு வரவேற்புக் கமிட்டி.

ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்; No. A. 1601, ஸ்ரீவில்லிபுத்தூர்.

எங்களிடம் 20s x 26s நூலில் தயாரித்த 30″ x 16 கெஜம், 50″ x 12 கெஜம் காடா பீசுகளும்,
4 x 8 வேஷ்டி மடிகளும், 36s x 40s நூலில் தயாரித்த 2 x 8 வேஷ்டி ஜோடிகளும்,
50″ x 12 கெஜம் பீசுகளும், 45″ x 7 கெஜம் பல கலர்களில்
பட்டுப்பேட்டுப் போட்ட சேலைகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

தற்சமயம் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

தேவைக்கு எழுதுங்கள்! முன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம்

A. K. ஞானியார், செயலாளர். பெ. குருசாமி, தலைவர்.



P. A. ராஜு செட்டியார் & பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 செ. முதல் 30 செ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த
5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும்,
வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. தலைவர்.

Edited & Published by: M. K. Swamy at 19/22, Muthanankulam Street, Coimbatore.